# அரசு பணிந்தது ஐக்கியம் வென்றது

# கஸ்டம்ஸ் ஊழியர்களின் வெற்றிதரும் படிப்பினைகள்


# தொழிலாளி

இலங்கைத் தொழிலாள வர்க்கத்தின் ஒரே வார இதழ்

மலர் 1 இதழ் 15 | டிசம்பர் 14, 1963 | பக்கங்கள் 8 | விலை சதம் 10


## துறைமுக வேலைநிறுத்தம் தீர்க்க முன்வருக

தொழிற்சங்க இயக்கத்தின் ஐக்கியம் இவ்வாரம் மகத்தான வெற்றிகண்டது.

தமது ஆட்சிக் காலத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கம் முதல் தடவையாக தொழிலாளர் ஐக்கியத்தினால் பின்னடைய நிர்ப்பந்திக்கப் பட்டது.

கஸ்டம்ஸ் சேவையிலுள்ள சகல பகுதியினதும் ஒருமித்த பலம், துறைமுக வேலைகளை ஸ்தம்பிக்கச் செய்தது. பயமுறுத்தல்களும், எச்சரிக்கைகளும் பயனற்றுப் போகவே, ஆட்சியினர் பின்னடைந்தார்கள்.

வேலை நிறுத்தத்தைத் தகர்க்க கடைசி ஆயுதமாக ஆட்சியினர் ராணுவத்தை அனுப்ப முயன்றனர். ஆனால், வேலை நிறுத்தக் காரர்களை இதனால் அச்சுறுத்த முடியாது போயிற்று. ராணுவத்தைக் கொண்டு வந்தால், முழுத் துறைமுகத் தொழிலாளர்களும் வெளியேறுவார்கள் என்று துறைமுகத் தொழிலாளர் சங்கங்கள் விடுத்த எச்சரிக்கை, ஆட்சியினரை கதிகலங்கச் செய்தது.

கஸ்டம்ஸ் ஊழியர்களின் மகத்தான வெற்றி, தொழிலாளர் ஐக்கியத்தின் முன் எந்தப் பலத்தாலும் எதையும் செய்ய முடியாது என்பதை தெளிவுற மெய்ப்பிக்கின்றது.

தொழிலாளி வர்க்கம் ஒற்றுமைப் பட்டால், இந்த அரசாங்கமென்ன, எந்த அரசாங்கத்தாலும் தொழிலாளி வர்க்கத்தை எதிர்த்து நீண்ட காலம் வாழ முடியாது. அதோடு, தொழிற்சங்க ஐக்கியத்தின் முன் அவர்கள் சக்தி அற்றவர்களாகவும், பலமற்றவர்களாகவும் இருக்கிறார்கள்.

இந்த உண்மைகளை முழுத் தொழிலாள வர்க்கமும் உணர்வதுடன், கஸ்டம்ஸ் வெற்றி மூலம் நல்ல படிப்பினைகளும் பெற வேண்டும்.

ஈழத்திரு நாட்டு சகல தொழிலாள வர்க்கத்தினதும் பொதுப் போராட்டமான, 21 கோரிக்கைகளை வென்றெடுப்பதற்கு சகல தொழிலாளர்களும் ஓரணி திரள வேண்டும். ஐக்கியம் நிச்சயம் வெற்றி தரும்.

கஸ்டம்ஸ் வேலை நிறுத்தம் தீர்க்கப்பட்டிருப்பதால், இதே போன்று சி. எம். யூ. தலைமையில் கடந்த ஒரு மாத காலமாக நடைபெறும் துறைமுக வேலை நிறுத்தத்தையும் தீர்க்குமாறு ஆட்சியினரை சகல மக்களும் கோருகிறார்கள். வேலை நிறுத்தம் செய்த கஸ்டம்ஸ் ஊழியர்களுடன் பேச்சுவார்த்தை நடத்த ஆட்கியாளருக்கு முடியுமாயின், துறைமுகத் தொழிலாளக்களுடன் பேச்சுவார்த்தை நடத்த ஆட்சியாளருக்கு ஏன் முடியாது?

ஆட்சியாளரின் பிடிவாதப் போக்கும், கடின போக்கும் தொழிலாளர்களை மேலும் மேலும் சக்தி பெறச் செய்யவும், ஐக்கியமுறவும் செய்யுமே தவிர, பல வீனமடையச் செய்யாது என்று ஆட்சியினருக்கு எச்சரிக்க விரும்புகிறோம்.

### கொழும்பு டிஸ்றிக் கட்சி மாநாடு

# மிகப் பிரமாண்டமான வெற்றி

## திரிபுவாதிகளுக்கு கொழும்பில் இடமில்லை

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் கொழும்பு டிஸ்றிக் கட்சி அங்கத்தவர்களின் மாநாடு, கடந்த 7-ந் தேதி ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணிக்கு கொழும்பு செஞ்சிலுவை மண்டபத்தில் நடைபெற்றது. மாநாட்டிற்கு தோழர்கள் டபிள்யூ. ஏ. தர்மதாஸ, எச்.எம்.பி. முஹிதீன், ஏ. ஜெயசூரிய ஆகியோரைக் கொண்ட தலைமைக் குழு தலைமை வகித்தது.

கொழும்பிலுள்ள முழு அங்கத்துவத் தொகையில் பெரும் பகுதியினர், 215 பிரதிநிதிகள் மாநாட்டில் கலந்து கொண்டனர். எண்ணற்ற அங்கத்தவர்கள் வர இயலாமைக்கு வருத்தம் தெரிவித்தும், மாநாட்டின் நோக்கங்களுக்குப் பூரண ஆதரவு தெரிவித்தும் கடிதங்கள் எழுதியிருந்தனர். அபேட்சக அங்கத்தவர்கள் பார்வையாளர்களாகக்கலந்து கொண்டனர்.

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியிலுள்ள திரிபுவாதத் தலைமை, கொழும்பு டிஸ்றிக் மாநாட்டை கடந்த 3 ஆண்டுகளாகக் கூட்டாதிருப்பதை தலைமைக் குழுவின் சார்பில் தோழர் ஜெயசூரியா. விளக்கினார்.

எண்ணற்ற கிளைகள் மாநாடு கோரியும், அவைகளுக்கு சட்டை செய்யாது, சட்ட வரம்பை மீறி, கொழும்பு டிஸ்றிக் கட்சி யந்திரத்தைத் தமக்கு சாதகமாகப் பாவிப்பதை விஸ்தாரமாகக் கூறி, மாநாட்டின் நோக்கத்தை விளக்கினார் ஜெயசூரியா.

7-வது கட்சி காங்கிரஸ் ஸ்தாபகக் குழுவின் சார்பில், அதன் செயலாளர் தோழர் பிரேமலால் குமாரசிரி, 4 மணி நேர உள் கட்சி பிரச்சினைகளுடன் சம்பந்தப் படுத்தி தனது உத்தேச நகல் அரசியல் அறிக்கையை சமர்ப்பித்தார்.

மாலையில் தோழர் என். சண்முகதாசன் 7-வது கட்சிக் காங்கிரஸுக்குரிய உத்தேச நகல் ஸ்தாபன அறிக்கையை சமர்ப்பித்தார்.

7-வது கட்சிக் காங்கிரஸ் கூட்ட மார்க்ஸிஸ-லெனினிஸ்டுகளுக்கு 116 பிரதான கட்சித் தோழர்கள் விடுத்த அறிக்கையை டிஸ்றிக் மாநாடு ஏற்றுக் கொண்டதுடன், தனது பூரண ஆதரவையும் தெரிவித்தது.

தோழர் டி. கே. டி. ஜினேந்திர பாலாவை செயலாளராகவும், தோழர்கள் ஜிஹேம சந்திரா, அ. மரியதாஸன், கே. சுரேந்திரா ஆகியோரை உப-செயலாளர்களாகவும் கொண்டு, 21 பூரண அங்கத்தவர்களையும், 7 அபேட்சக அங்கத்தவர்களையும் கொண்ட டிஸ்றிக் கமிட்டியொன்று தெரிவு செய்யப்பட்டது.

பதுளை, கோட்டே மற்றும் பல கட்சி டிஸ்றிக் கமிட்டிகளின் சார்பில் தோழர்கள் வாழ்த்துத் தெரிவித்தனர்.

கம்கருவா, தொழிலாளி வளர்ச்சி நிதிக்காக ரூ. 58/60 மாநாட்டில் வசூலிக்கப் பட்டது.

இரவு 7.30 மணிக்கு மாநாடு முடிவுற்றது.

# ஐயுப்கான்வருகை

## பிலிப் குணவர்தன எதிர்ப்பின் பின்னணி என்ன?

பாக்கிஸ்தான் ஜனாதிபதி ஐயுப்கானின் இலங்கை விஜயம் சில வட்டாரங்களில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இந்திய அரசும், பிற்போக்குப் பகுதியும் கடுமையாக இந்த விஜயத்தைத் தாக்கியுள்ளன. எம். ஈ. பி. தலைவர் பிலிப் குணவர்தன இந்திய பிற்போக்கு வாதிகளின் தாக்குதல்களுக்கு இலங்கையில் குரல் கொடுத்தார்.

பாக்கிஸ்தான் தடுமாற்ற நிலையில் உழல்வதுஉண்மையே. இந்தியாவுடனுள்ள விரோதத்தால் பாக்கிஸ்தான் படிப் படியே மேற்கத்திய நாடுகளுடன் இணைந்தது. இந்தப் பிணைப்பு சியாட்டோ, சென்டோ போன்றவற்றில் பாக்கிஸ்தான் பங்கு வகிக்கும் அளவுக்கு கொண்டு சென்றது. ஆனால், மேற்கத்திய நாடுகளுக்கு பாக்கிஸ்தான் இரண்டாந்தர நாடாகவே உள்ளது. அவர்களின் முழு முதல் நோக்கும் இந்தியாவை கைப்பாவையாக்கி வைத்திருப்பதே.

இதற்கான வாய்ப்பை ஏகாதிபத்திய வெறியர் எதிர்பார்த்திருந்தனர். இந்திய பிற்போக்குக் கும்பல், சீனத்துக்கு எதிராக பாரத நாட்டை ஏவிவிட்டது. தருணத்தைப் பாவித்து ஆயுதமும், பணமும் தாராளமாக அளித்தன ஏகாதிபத்தியங்கள். பாக்கிஸ்தான் கண்டனம் முழக்கியது, ஆனால், பயனில்லை. காஷ்மீர் பிரச்சினையிலும் எதிர்பார்த்த உதவி கிடைக்கவில்லை.

(3-ம் பக்கம் பார்க்க)

# சி.டி.யூ.எப். 16-வது மாநாடு

**டிசம்பர் 18-21, புதிய நகரமண்டபம், கொழும்பு-7**

**டிசம்பர் 21-ம் திகதி சனிக்கிழமை, பி.ப. 4-30 மணிக்கு**

## பொதுக்கூட்டம்

**ஹைட்பார்க்கில் நடைபெறும்**

## ஊர்வலம்

**பி. ப. 2-30 மணிக்கு ஹைட்பார்க்கிலிருந்து ஆரம்பமாகின்றது**

சீன, கொரிய, வியட்நாம், சோவியத் ரஷ்யா, ஹங்கேரி, இந்தோனேஷியா ஆகிய நாடுகளிலிருந்து பிரதிநிதிகள் மாநாட்டில் கலந்துகொள்வர் என எதிர்பார்க்கப்படுகிறது. (பிரதிநிதிகள், பார்வையாளர்கள் பட்டியலை அனுப்பாத சங்கங்கள், அவற்றினை உடனே அனுப்புமாறு வேண்டுகிறோம்.)

**இலங்கை தொழிற் சங்க சம்மேளனம்.**

எமது குரல்

# வெளியேற்று

நாளொருமேனி தொழிலாள வர்க்கத்தின் போராட்டங்கள் அதிகரித்து வருகின்றன.

இதற்குக் காரணம் என்ன?

அவசிய உணவுப் பொருட்களின் விலைகள் ராக்கெட் வேகத்தில் ஏறுகின்றன. வாழ்க்கைப் புள்ளி 109ஐ எட்டிப் பிடித்துவிட்டது. தலைதூக்க முடியாத அளவில் உழைப்பாள மக்களை ஜீவியப் பாரம் அமுத்தி வருகிறது.

ஆனால், சம்பளத்திலோ உயர்வில்லை. பஞ்சப்படி குறைகிறது. தொழில் சலுகைகள் பறிக்கப் படுகின்றன. ஆள் குறைப்புப் பரவுகிறது. இவைகளுக்கெல்லாம் மேலாக ஆட்சியாளரின் சம்பள உயர்வுக் கட்டுப்பாட்டுக் கொள்கை.

இவை மட்டுமா? ஆட்சியாளரின் புதுக் கொள்கை - தொழிலாளி வர்க்க விரோதக் கொள்கை, சமரசப் பேச்சுவாத்தையை நிராகரிக்கிறது; போலிஸ், ராணுவம் பாவித்து வேலை நிறுத்தங்களைத் தகர்க்கிறது; வேலை நிறுத்தங்களைமுறியடிக்க கருங்காலித்தனம் கையாளப்படுகிறது.

இந்த நிலையில், பறிக்கப்பட்ட உரிமைகளைப் பெற, இன்றுள்ள சலுகைகளைப் பாதுகாக்க, ஜீவியத்திற்கு குறைந்தபட்ச சகாயம் பெற தொழிலாளி வர்க்கத்தின் முன்னுள்ள ஒரே வழி -- வேலை நிறுத்தம்.

ஆனால், நியாயமான இவ் வேலை நிறுத்தங்களை ஆட்சியாளர் பிடிவாதக் கொள்கையுடனும், சட்டத்தைப் பிரயோகித்தும் சீர்குலைக்க முனைகிறார்கள். இந்தக் கொள்கைக்கு நாயகப் பாத்திரம் ஏற்றுத் துள்ளுகிறார் மஹாநும சமரவீரா.

புதிய ஹிட்லர் வேஷம் பூண்டு, ''தொழிலாளி வர்க்கப் போராட்டங்களைப் பூண்டோடு ஒழிப்பேன்'' என்று சூளுரைக்கிறார் மஹாநும சமரவீரா. இப்படித்தான் 1953-ல் ஜே. ஆர். ஜெயவர்த்தனவும், பின்னர் சர்.ஜோன் கொத்தலாவலையும் சவால் விட்டனர். இவர்களுக்கு ஏற்பட்ட முடிவை நாடறியும், மஹாநும சமரவீராவும் அறிவார்.

தொழிலாளர் துரோகத்தில் உழலும் மஹாநும சமரவீராவுக்கு எதிராக நிதி மந்திரி இலங்கரத்ன துறைமுக வேலை நிறுத்தத்தை பேச்சுவார்த்தைகளின் மூலம் சமரசமாகத் தீர்த்திருப்பது வரவேற்கத் தக்கதாகும்.

இந்தக் கொள்கையை முழு அரசாங்கமும் பின்பற்றவேண்டும். இதற்கு விரோதமாகவுள்ள மஹாநும சமரவீராவை உடனடியாக மந்திரி சபையிலிருந்து வெளியேற்ற வேண்டும்.

பலவந்தத்தினாலும், அடக்குமுறைகளினாலும் தொழிலாளி வர்க்கப் போராட்டங்களை ஒருபோதும், தீர்க்க முடியாது என்பதை ஆட்சியாளருக்கு எச்சரிக்கிறோம்.

# 7-வது தேசிய மாநாட்டிற்கு எங்கும் ஆதரவு

**116 பிரதான கட்சித் தோழர்களின் கைச்சாத்துடன் வெளியான, 7-வது தேசிய மாநாட்டிற்கான வேண்டுகோளை இலங்கை எங்குமுள்ள கட்சிக் கிளைகளும், மாவட்டக் கிளைகளும் அங்கீகரித்து வருகின்றன. இதுவரை எமக்குக் கிடைத்துள்ள விபரங்களை இங்கு தந்துள்ளோம். உங்கள் கிளைகளின் முடிவுகளை தயவு கூர்ந்து அனுப்பித் தாருங்கள்.**

## கேகாலை கட்சி மாவட்ட மாநாடு

1963-ம் ஆண்டு, டிசம்பர் மாதம் முதலாம் திகதி கூடிய கேகாலை மாவட்ட மாநாட்டில், ''இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் உண்மையான மார்க்ஸிஸ-லெனினிஸவாதிகளுக்கு'' 116 பிரதான அங்கத்தவர்களால் கையொப்பமிட்டு வெளியிடப்பட்ட பிரகடனம் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. 7-வது தேசிய மாநாடு கூடும்வரை மாவட்டக் கமிட்டியின் தலைமையில் மட்டும் இயங்குவதென்றும், மாவட்டச் செயலாளரின் அனுமதியின்றி எந்தக் கட்சி நடவடிக்கையிலும் பங்குபற்றுவதில்லை என்றும் தீர்மானித்த இக்கூட்டம்,திரிபுவாதக் கும்பலின் எந்தவேண்டுகோளையும் மாவட்டத்தில் அமுல் நடத்துவதில்லை என்றும் தீர்மானிக்கப்பட்டது.

அரசியல் குழுவின் அங்கத்தவரான தோழர் அர்னோலிஸ் அப்புஹாமியும் மற்றும் சிலரும், கொழும்பிலிருந்து வந்து, வீடுவீடாகச் சென்று, துப்பிரச்சாரம் செய்து, இம்மாநாட்டை தடை செய்ய எடுத்த முயற்சிகள்யாவும் படுதோல்வியடைந்தன.

கிளைச் செயலாளர்கள், தொழிற்சங்கம், வாலிபர் சங்கம் போன்ற வெகுஜன இயக்கங்களின் தலைவர்கள் அடங்கிய அங்கத்தவர்கள் அதிகமானோர் கலந்துகொண்ட இம் மாநாட்டில் தோழர் பிரேமலால் குமாரசிறி சொற்பொழிவாற்றினர்.

## மட்டக்களப்பு

1963, டிசம்பர் மாதம் 2-ம் திகதி இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் மட்டக்களப்புக் கிளைக் கூட்டத்தில் 116 அங்கத்தவர்கள் கையொப்பமிட்ட பிரகடனத்தை ஏற்றுக் கொண்டு அவர்களால் கூட்டப்படும்7-வதுதேசிய மாநாட்டில் கலந்துகொள்வதென ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது. இக்கூட்டத்தில் மத்தியக் கமிட்டி அங்கத்தவர் கே. குலவீரசிங்கம் கலந்து கொண்டார்.

## சர்வகலாசாலைக் கிளை

இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் கொழும்பு சர்வகலாசாலைக் கிளை தனது கூட்டத்தில் 7-வது தேசிய மாநாட்டிற் கலந்துகொள்ள, பிரதிநிதிகள் அனுப்புவதாகத் தீர்மானித்தது. பிரதிநிதிகளுடன், பார்வையாளர்களையும் அனுப்ப விரும்புவாக மாநாட்டு தயாரிப்புக் கமிட்டிக்கு கடிதமூலம் தெரிவித்துள்ளது.

## யக்கலமுல்ல

1963-ம் ஆண்டு நவம்பர் மாதம் 29-ம் திகதி யக்கலமுல்லகம்யூனிஸ்ட் கட்சிக்கிளை, தோழர்கள் சண்முகதாசன், பிரேமலால் குமாரசிரி ஆகியவர்களைக் கட்சியிலிருந்து நீக்கியதைக் கண்டித்தும், அவர்களை மறுபடி கட்சியில் சேர்க்கும்படியும் ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றியது.

## கல்கிசை

இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் கல்கிசைக் கிளை 116 அங்கத்தவர்கள் கையொப்பமிட்ட, உண்மை மார்க்ஸிஸ-லெனினிஸவாதிகளுக்கு விடுத்த பிரகடனத்தை ஆதரித்தும், 7-வது தேசிய மாநாட்டில் கலந்துகொள்வதென்றும் ஏகமனதாகத் தீர்மானித்துள்ளது.

## யக்கலமுல்ல

1963, நவம்பர் 28-ம் திகதி கூடிய இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் சாலமுல்லைக் கிளை எல்லா மார்க்ஸிஸ-லெனினிஸவாதிகளுக்கு விடுத்த பிரகடனத்தை மகிழ்வுடன் ஏற்றுக் கொள்வதுடன் 7-வது தேசிய மாநாட்டில் கலந்துகொள்வதென ஏகமனதாகத் தீர்மானித்தது.

## பகிரங்க சொற்பொழிவு

ஸ்டாலின் வாழ்வும்,
மார்க்ஸிய சேவையும்

எனும் பொருள் பற்றி

நா. சண்முகதாசன்
அவர்கள் பேசுவார்

செஞ்சிலுவைச் சங்க
மண்டபத்தில்

டிசம்பர் 22-ம் திகதி ஞாயிறு
மாலை 4-30 மணிக்கு.

## வருந்துகிறோம்

பிளவுஸ் ஹோட்டலில் தொழிலாளர் சங்க உப-தலைவர் தோழர் எம்.எஸ். ஹஸன் அவர்களின் சகோதரர் 29-10-63-ந் தேதியன்று காலமானார்.

தோழர் ஹஸனுக்கும் அவரது குடும்பத்தினருக்கும் பிளவுஸ் 'தொழிலாளி' சார்பாகவும், இ. தொ.ச.ச. சார்பாகவும் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

★

பிளவுஸ் தொழிலாளர் சங்க உப—காரியதரிசி தோழர்ஏ.எல்.எம்.லாபீர் அவர்களின் தகப்பனார் கடந்த 1-11-63-ந் தேதி காலமானதையிட்டு வருந்துகிறோம்.

தோழர் லாபீருக்கும் குடும்பத்தினருக்கும் பிளவுஸ் தொழிலாளர், இ. தொ. ச. ச., ''தொழிலாளி'' சார்பில் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

# தொழிலாளர் துரோகிக்கு கல்தா

## துறைமுகத் தொழிலாளர் விசேஷ பிரதிநிதிகள் மாநாட்டின் முடிவு

[நமது விசேஷ கொழும்பு நிருபர் ஏ. ராமநாதன்]

இலங்கைத் துறைமுகத் தொழிலாளர் சங்கத்தைப் பிளவுபடுத்த முனையும் எஸ். ஜே. த. சில்வா, தினசரி துண்டுப் பிரசுரங்கள் வெளியிட்டு, இலங்கைத் தொழிற்சங்க சம்மேளனத்தின் பொதுச்செயலாளர் தோழர் என். சண்முகதாசனுக்கு விரோதமாக பொய் அபாண்டங்களைக் கூறி வகுப்புவாதத்தைப் பிரச்சாரப்படுத்துவதையே தொழிலாகக் கொண்டுள்ளார். இந்த சீர்குலைவுப் போக்கை எதிர்த்து, இலங்கை துறைமுகத் தொழிலாளர் சங்கத்தைப் பாதுகாக்கவேண்டியுள்ளது.

எனவே, இந்த விசேஷ கூட்டத்தை காரியக் கமிட்டியின் அனுமதியோடு கூட்டியுள்ளோம் என்று கடந்த டிசம்பர் 7-ந் தேதி கொழும்பு ஶ்ரீநாராயணகுரு மண்டபத்தில் நடைபெற்ற துறைமுகத் தொழிலாளர்கள் பிரதிநிதிகள் கூட்டத்திற்குத் தலைமைவகித்த சங்கத் தலைவர் தோழர் பீ. எக்மன் குறிப்பிட்டார்.

அவர் பேசும்போது, இலங்கைத் துறைமுகத் தொழிலாளர் சங்கம், இலங்கைதொழிற்சங்க சம்மேளனத்தின் சரியான தலைமையின்கீழ், தொழிற்சங்க ஐக்கியத்திற்காகவும், தொழிற்சங்கங்களின் மத்திய ஸ்தாபனங்கள் கூடி தீர்மானித்த 21 கோரிக்கைகளுக்காகவும் போராடுகிறது. தொழிலாளர்கள் ஒன்றுபட்டு போராட அணிதிரளும்போது பிளவு வாதிகளும்-சந்தர்ப்பவாதிகளும் சகலவித சீர்குலைவு வேலைகளையும் செய்கிறார்கள். இதற்கு துறைமுகத் தொழிலாளர்கள் இடமளிக்கப்போவதில்லை. சீர்குலைவாளரை சின்னபின்னப்படுத்துவோம், துறைமுகத் தொழிலாளர்கள் தோழர் ''சண்'' மீது பூரண நம்பிக்கை கொண்டுள்ளோம் என்று குறிப்பிட்டார்,

தொடர்ந்து பேசும்போது, எஸ். ஜே. த. சில்வா தொழிலாளர்விரோதப் போக்கை அனுசரித்ததாலும்-சங்கத்தை பிளவுபடுத்த கோஷ்டி அமைத்ததாலும், பொய்ப் பிரச்சாரங்களையும், பச்சை வகுப்புவாதத்தை பிரதிபலித்ததாலும், சங்கத்திற்கு உரிய தட்டெழுத்து யந்திரத்தை தன் வீட்டில் வைத்து சொந்தக் காரியங்களுக்கு உபயோகித்ததாலும்-தான்தோன்றித்தனமாக செயல்பட்டதாலும் அவரையும் அவரோடு கூடி ஒழுங்காக மாதந்தோறும் வரவு-செலவு கணக்குகளை காட்டத் தவறிய, பொருளாளர் ரி. எம். சிரில் மற்றும் சில பிளவுவாதிகளையும் கடந்த நவம்பரில் கூடிய காரியக் கமிட்டியினால் வெளியேற்றப் பட்டார்கள். இதன் உண்மைகள் நீங்கள் அறிந்ததே என்று கூறினார்.

அடுத்து தோழர்எஸ். சாகுல் ஹமீட் பேசும்போது, இன்று வகுப்புவாதத்தை உச்சரித்தால்தான் வாழமுடியும் என்ற நிலைக்கு எஸ். ஜே. டி. சில்வாவும் மற்றும் சிலரும் உள்ளாகியிருப்பது பரிதாபத்திற்கு உரியது. என்னவரினும், நாம் இலங்கை தொழிற்சங்க சம்மேளனத்திலிருந்து, இலங்கை துறைமுகத் தொழிலாளர் சங்கத்தைப் பிரிக்க-பிளவுபடுத்த அனுமதிக்கமாட்டோம். இவ்வளவு பிரதிநிதிகள் கலந்துகொண்டது துறைமுகத் தொழிலாளரின் ஐக்கிய உணர்வை மேம்படுத்துகிறது என்றார்.

இவ்வேளை தோழர் கே. டி. ரணவீர மேடைக்கு வந்து தன்னிடம் எஸ். ஜே. த. சில்வா மற்றும் சிலரும் வந்து பொய்களைக் கூறி தன்னை ஏமாற்றி கையெழுத்து வாங்கியதாகக் கூறினார். இன்று இக்கூட்டத்தில் கலந்துகொள்வதோடுதான் எஸ்.ஜே.த. சில்வாவின் போட்டி தொழிற்சங்கஅமைப்பை எதிர்த்துப் போராடப் போவதாகவும் கூறினார்.

தோழர் எம். பி. குணபால (முன்னாள் தலைவர்) பேசும் போது தாம் கடந்த காலத்தில் இலங்கை துறைமுகத் தொழிலாளர் சங்கத்தைக் கட்டி வளர்க்க முற்பட்டபோது ஏற்பட்ட அனுபவங்களையும் ஐக்கியத்தின் விரோதிகள்நமது சங்கத்தை பலவீனப்படுத்தியதையும் தெளிவாகக் குறிப்பிட்டார். இன்று தொழிலாளர்கள் உணர்வுபெற்றுவிட்டார்கள். துரைமார்கள் தலைமை தாங்கியதுபோதும். துறைமுக தொழிலாளர்களே தங்கள் சங்கத்தை தலைமைதாங்கி நடத்தும் ஆற்றல் பெற்றுள்ளனர் என்றார். தொடர்ந்து ''சண்''னுக்கு விரோதமாக இந்தத் தலைவர்கள் செய்யும் பிரச்சாரம் முழு தொழிலாளர் வர்க்கத்திற்கே செய்யும் தீங்காகும் என்றார்.

காரியக் கமிட்டியினால் பொதுச் செயலாளர் பதவியிலிருந்து விலக்கப்பட்ட எஸ். ஜே. த. சில்வா கோஷ்டியினருக்குப் பதிலாக கீழ்க்கண்டவர்கள் காரியக் கமிட்டிக்கு தெரிவு செய்யப்பட்டனர்.

கே. விக்டர் — பொதுச்செயலாளர்

எல். எச். ரியூடர் — உப-செயலாளர்

என். எம். வில்லியம் — உப-தலைவர்

எம். எல். வில்பர்ட் பெரேரா — உப-தலைவர்

எம். பி. குணபால — பொருளாளர்

கமிட்டி உறுப்பினர்கள்:

எம். நலீம், ஏ. நந்தசேன, கே. ஏ. எட்வின், டேவிட் பெரோரா.

இக்கூட்டத்தில் தோழர் வில்லியம் கமகே (முன்னாள் தலைவர்) உட்பட பலர் பேசினார்கள்.

சென்றவாரத் தொடர்ச்சி

# புரட்சியா, பாராளுமன்றமா?

பாட்டாளி வர்க்கம், அரசாங்கத்தைக் கைப்பற்றிப் பொருளுற்பத்திச்சாதனங்களை முதல் தடவையாக அரசாங்க உடைமையாக்குகிறது. இதைச் செய்வதால், பாட்டாளி வர்க்கம் என்ற பெயருக்கு அதுவே முற்றுப்புள்ளி வைக்கிறது. எல்லா வர்க்க வேறுபாடுகளுக்கும், வர்க்க குரோதங்களுக்கும் அது முடிவு கட்டுகிறது ('லெனின் அரசாங்கமும், புரட்சியும்')

லெனினின் இக்கூற்றுக்கு அமைய இன்று உலகின் மூன்றில் ஒருபகுதியில் பாட்டாளிகளின் ஆட்சியின் கிழ் வர்க்க பேதமற்ற, வர்க்க குரோதங்களுக்கும், வேறுபாடுகளுக்கும் முடிவு கட்டப்பட்ட சோஷலிஸ அமைப்பு இருந்துவருகிறது. ஆனல் உலகின் இருபகுதியில்-உலகின் பெரும்பான்மையான நாடுகளில் - பாட்டாளி வர்க்க ஆட்சியோ, வர்க்கபேதமற்ற சோஷலிஸ அமைப்போ, இன்னும் நிறுவப்படவில்லை.

அங்கு வர்க்கங்களும், வர்க்கக் குரோதங்களும், போராட்டங்களும், அடக்கு முறைகளும், சுரண்டலும், ஏகாதிபத்திய அடிமைத்தனமும் மொத்தமாகச் சொல்லப்போனல் சகல விதமான அயோக்கியத்தனங்களும் இன்றும் வாட்டசாட்டமாக உயிர் வாழ்ந்துகொண்டிருக்கின்றன. இவற்றிற்கு முடிவு கட்டவேண்டிய சரித்திர ரீதியான கடமை, இங்கு வாழும் பாட்டாளி வர்க்கத்திற்கு இன்றும் இருந்துகொண்டேயிருக்கிறது. இதற்கு மகத்தான சோவியத், சீனப் புரட்சிகளையும் தொடர்ந்து முன்கொண்டு செல்லவேண்டிய பொறுப்பு சோஷலிஸ்ட் அல்லாத நாடுகளிலுள்ள பாட்டாளி வர்க்கத்துக்கும், அதற்குத் தலைமை தாங்கும் மார்க்சிஸ்ட் – லெனினிஸ்ட் கட்சிகளுக்கும் இன்னும் இருந்துகொண்டேயிருக்கிறது. சரித்திர ரீதியான இக்கடமையை வெற்றிகரமாக நிறைவேற்ற மார்க்சிஸ – லெனினிஸத்தின் புரட்சிகரக் கோட்பாடுகள் இன்றும் தேவையாயிருக்கின்றன. ஏகாதிபத்தியத்தின் கீழும், முதலாளித்துவத்தின் கீழும் நசுக்கப்பட்டு, அடக்கி ஒடுக்கப்பட்டு சுரண்டலுக்கும், வாழ்க்கையின் சிறுமைகளுக்கும் ஆளாகித் துடி துடிக்கும்

## இளங்கிரன்

(தலைசிறந்த ஈழத்து நாவலாசிரியர்; இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்க முன்னணித் தலைவர்)

சகல மக்களும் தமது விமோசனத்துக்காக நடத்தும் போராட்டங்களுக்குச் சரியான திசை வழிகாட்டும் கலங்கரை விளக்கமாகவே இன்றும் இவை இருந்துவருகின்றன. எனவே மார்க்சிஸ – லெனினிஸத்தின் புரட்சிகரக் கோட்பாடுகள் நிச்சயமாகக் காலங்கடந்து விட்டவையல்ல.

### திரிபுவாதிகளின் வாதங்களும், செயல்களும் எதைக் காட்டுகின்றன?

கம்யூனிஸ்ட் இயக்கத்திலுள்ள நவீன திரிபுவாதிகளும், மிதவாதிகளும் இப்போது என்ன சொல்கிறார்கள்? "சமாதான முறையில் சோஷலிஸம்" என்ற போர்வையில் பாராளுமன்ற வாழ்வையே வலியுறுத்திச் சொல்கிறார்கள். தங்களுடைய வாதத்துக்குச் சாதகமாக உலகக் கம்யூனிஸ்ட் கட்சிகளின் அறிக்கையையும் துணைக்கு அழைத்து ஆதாரம் காட்டுகிறார்கள்.

பிரகடனமும் அறிக்கையும் என்ன கூறுகின்றன?

"வெவ்வேறு நாடுகளிலும், சோஷலிஸத்துக்குச் செல்லும் முறைகள் மாறுபடலாம். தொழிலாளி வர்க்கமும் அதன் அடிப்படையில் மார்க்சிஸ-லெனினிஸக் கட்சியும் சமாதான முறையிலேயே சோஷலிஸப் புரட்சியைச் சாதிப்பதற்கு முயற்சித்து வருகின்றன. தொழிலாளி வர்க்கத்தின் நலன்களுக்கும் இது ஒத்ததாகவேயிருக்கும்.

"பல முதலாளித்துவ நாடுகளில் (மார்க்சிஸ-லெனினிஸக் கட்சியினல் தலைமை தாங்கப்படும்) தொழிலாளி வர்க்கமானது, பெரும்பான்மையான மக்களை ஐக்கியப் படுத்தி உள்நாட்டு யுத்தமில்லாமல் அரசாங்க அதிகாரத்தை வென்று அடிப்படையான பொருளுற்பத்திச் சாதனங்களை மக்களுடைய உடமையாக ஆக்குவதற்குள்ள வாய்ப்புக்கள் உள்ளன தொழிலாளி வர்க்கமும் பிறரும் சேர்ந்த ஒரு பொது மக்கள் அணி உருவாகுமானல் அல்லது நடைமுறை வேலைத் திட்டத்தைப் பற்றிய ஒப்பந்தமும் வெவ்வேறுகட்சிகளுடைய பொது ஸ்தாபனங்களுடைய ஒத்துழைப்பும் ஏற்பட்டு, பெரும்பான்மை மக்களை ஒன்றுபடுத்துவது சாத்தியமானல் உள்நாட்டு யுத்தமின்றியே அரசாங்க அதிகாரத்தைப் பெறுவதற்கான வாய்ப்புகளுண்டு.

பெரும்பான்மை மக்களின் ஆதரவை நம்பியும், நிலப்பிரபுக்களுடனும், முதலாளிகளுடனும் சமரசக் கொள்கையை விட்டுக்கொடுக்க முடியாதவர்களாகிய சந்தர்ப்பவாத நபர்களை உதறித் தள்ளுவதன் மூலமும், தொழிலாள வர்க்கம் பிற்போக்கு மக்கள் விரோதச் சக்திகளை முறியடிக்க முடியும். முதலாளி வர்க்க நலனுக்கு உதவும் சாதனமாகப் பாராளுமன்றத்தைப் பயன்படுத்துவதினின்று மாற்றி அதை உழைப்பாளி மக்களுக்கு உதவும் சாதனமாக மாற்ற முடியும். பாராளுமன்ற முறையில்லாத வேறு முறைகளில் வெகுஜனப் போராட்டத்தை ஆரம்பித்து பிற்போக்கு சக்திகளின் எதிர்ப்பைமுறியடித்து சோஷலிஸப் புரட்சியை சமாதான முறையில் நிறைவேற்றுவதற்கான அவசியமான யதார்த்த நிலைகளைச் சிருஷ்டிக்க முடியும். பெரும் ஏகபோக முதலாளிகளை எதிர்த்தும் பெரும் சமூக சீர்திருத்தங்களுக்காகவும், சமாதானத்திற்காகவும் சோஷலிஸத்திற்காகவும் தொழிலாளர்களுடைய, விவசாயப் பெருமக்களுடைய நகர்ப்புற மத்தியதர மக்களுடைய வர்க்கப் போராட்டத்தைத் தொடர்ந்தும், விரிவாகவும் வளர்த்துச் செல்வதன் மூலமும் இது சாத்தியமாகும்"

இவ்வாறு சமாதான முறையில் சோஷலிஸத்துக்கான வாய்ப்பை விளக்கிக்காட்டும் பிரகடனமும் அறிக்கையும் அதே சமயத்தில் பின் வருமாறும் கூறுகின்றன.

"மக்களுக்கு விரோதமான ஆளும் வர்க்கங்கள் பலாத்காரத்தைப் பிரயோகிக்கத் தலைப்பட்டால், சமாதான வழிகளல்லாத இதர வழிகளில் சோஷலிஸத்தை வந்தடைய வேண்டியிருக்கும் என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும். ஆளும் வர்க்கங்கள் தங்கள் அதிகாரத்தைத் தாங்களாகவே துறந்துவிடமாட்டார்கள் என்பதை லெனினிஸம் நமக்குப் போதிக்கிறது. அனுபவம் ஊர்ஜிதம் செய்கிறது. வர்க்கப் போராட்டத்தின் தன்மையும், முறையும் எப்படி இருக்கும் என்பது தொழிலாளி வர்க்கத்தைப் பொறுத்ததல்ல. பெரும்பான்மை மக்களின் விருப்பத்திற்கு விரோதமாகப் பிற்போக்குக் கும்பல்கள் எவ்விதத் தடையை உபயோகிக்கிறார்கள், சோஷலிஸத்துக்கான போராட்டத்தில், ஒரு கட்டத்தில், அல்லது இன்னொரு கட்டத்தில் எவ்வளவு பலாத்காரத்தைப் பிரயோகிக்கிறார்கள் என்பதைப் பொறுத்தது தான் அது. எந்த வழியில் சோஷலிசத்தை அடைவது என்பது அந்தந்த நாடுகளில் நிலவும் ஸ்தல நிலைகளைப் பொறுத்தது."

(தொடரும்)

# புரட்சியே நீவாழ்க!

**- யாழ்ப்பாணக் கவிராயர் -**

புதுவுலகம் காண்பதற்குப் புரட்சி வேண்டும்
புதுமைதனை அப்போதே பேண லாகும்.
இது உலகம் எமக்களித்த பாடம் என்றல்,
ஏற்றதொரு இலட்சியத்தை நழுவ விட்டு
அது புரட்சி இப்போது நமக்கு வேண்டாம்
அதற்கான காரணங்கள் அமையா தென்பர்;
புதுவுலகம் காண்பவரின் பேச்சுத் தானே
புரட்சியே நீவாழ்க ! வணக்கம் செய்தேன்.

புரட்சியிலே பூரணமாய்ப் பேறு கண்டு
புத்துலகச் சிருஷ்டிகளைப் போற்றி நின்றர்
மருட்சிகொண்டார் ? மாறுதலைக் காண்பார் தாமோ ?
மயக்கமென்ன மட்டற்ற முயக்கத் தாலோ ?
வெருட்சிகொண்ட மானதற்கு வெய்யில் கேடா
வெந்தழில் வீழ்ந்தாலும் விளைவு வேறு?
சிருஷ்டி நோக் கற்றீரோ செல்வர் போகம்
செறிவதினல் செகம் புதுமை செழித்த தாமோ ?

பாட்டாளி விவசாயிப் புரட்சி இன்றி
பாரதனில் புதுமைபெற முடியா துண்மை.
நீட்டோலை நெட்டுருப் போட்ட பின்னர்
நெடுஞ்சாணை மரமானர் என்றல் இங்கு
கூட்டாளி கூட்டுறவு குறைந்தே போகும்
கொத்தடிமை வாழ்வுதனில் குலவிச் செல்லும்
நாட்டீரே ! இழிவுநிலை வேண்டாா் இன்றே
நல்லதோர் புரட்சிக்கு வித்துக் கொள்வீர் !

பண்டிருந்த நிலைமாறி பழமை மாறி
பாவலரும் நாவலரும் போற்ற வந்த
தெண்டிரை திசைமேவு தேச மெல்லாம்
திகழ்கின்ற நிலைதன்னைத் திரும்பிப் பார்த்தும்
கொண்டிருந்த தம்மனைவி கருணை விட்டு
கணிகையரின் கலவியிலே காலம் மாய்க்கக்
கண்டிருந்த கவிவாணர் கவிதை பாட
காலந்தான் மாற்றத்தைக் கடந்த தையோ !

காலத்தால் உழைத்துழைத்து களைத்துப் போயோ
காணுத கட்டியத்தைக் காண வென்றே
ஞாலத்தில் பெரிதுவந்தீர் ! நன்மை பேணி
நாள்தோறும் நின்விளைவுகள் மறந்தோ போனீர் ?
ஏலத்தில் எம்கொள்கை இட்ட தென்றல்
ஏசாரோ ? இசைந்தவடு இற்றுப் போமோ ?
பாலத்து நட்டாற்றுப் பாய்ச்சல் நீரில்
பாய்ந்தீரோ ? பறித்தாரோ ? புரட்சி தானே ?

# ஐயுப் கான் வருகை

1-ம் பக்கத் தொடர்ச்சி

இந்த நிலை, பாக்கிஸ்தான் தலைவர்களுக்குப் பல பாரதூரமான புதிய முடிவுகளை எடுக்கத் தூண்டியது. இஸ்லாமிய சகோதரத்துவத்தை வலியுறுத்தவும் பாக்கிஸ்தானுக்கு முடியாதிருந்தது. காரணம், நஸார் நேரடியாகவே இந்தியா பக்கம் இருந்தார். எனவே, இது நாள்வரை தான் புறக்கணித்திருந்த ஆசிய நேசர்களை பாக்கிஸ்தான் நாட முற்பட்டது. சீனத்துடன் எல்லைப் பிரச்சினையைத் தீர்த்துக்கொண்ட பாக்கிஸ்தான், நேப்பாளம், பர்மா, இந்தோனேஷியா ஆகிய ஆசிய நாடுகளுடனும் நெருங்கிய உறவை ஏற்படுத்தியுள்ளது.

இந்தியாவுடன் உருவாகும் தகராறில், ஆசிய நாடுகள் தம் பக்கம் இருக்கவேண்டுமென்று பாக்கிஸ்தான் விரும்புவது, ஏகாதிபத்தியவாதிகளின் மீது பாக்கிஸ்தான் வைத்திருந்த நம்பிக்கையை சுக்குநூருகி விடுகிறது.

ஐயுப் கான் இலங்கை வர மற்றுமொரு காரணமும் உண்டு. பாண்டுங் மாநாட்டைப் போன்ற மற்றுமொரு ஆசிய ஆப்பிரிக்க நாடுகளின் மாநாட்டுக்கு ஆதரவு திரட்டவே அவர் வந்துள்ளார். டிட்டோ, நேரு, நஸார் போன்றோரின் நடுநிலைமை நாடுகளின் (பெல்கிரேட் மாநாட்டைப் போன்றது) மாநாடு திட்டத்திற்கு எதிரான ஆசிய, ஆப்பிரிக்க நாடுகளின் மாநாட்டிற்கு, ஏற்கெனவே சீன ஆதரவு தெரிவித்துள்ளது.

நடுநிலைமை பற்றி சிலருக்கு தப்பான கருத்துக்கள் இருக்கின்றன. ஐயுப் கானுக்கு இலங்கை வர அழைப்பனுப்பியதற்கு இலங்கைப் பிரதமரைக் கண்டித்துள்ள பிலிப் குணவர்தன, ஐயுப் கான் வருவது நடுநிலைமை கொள்கைக்கு பாதகம் விளைவிப்பதாகும் எனக் கூறியுள்ளார். இவர்களின் கருத்துப்படி, நடுநிலை என்பது, இந்தியா சார்பில் சீனவைத் தாக்குவதாகும்.

பிலிப் குணவர்தன பற்றி நாடறியும். சீன எதிர்ப்புக்கு இன்று அவர் முன்னணியில் நிற்கிறார். சீன-இந்திய எல்லைத் தகராறுப் பிரச்சினையில் கடுமையான எதிர்ப்பாளியாக இருந்தார். சீனத் தலைவர்களை யுத்த பிரபுக்கள் என்று கண்டித்தார். நேருவின் காலத்திலேயே இலங்கை — இந்தியப் பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டுமென்று அறிக்கை விடுபவர். நேரு கூட்டிய மாநாட்டுக்கு இலங்கையிலிருந்து அழைக்கப்பட்ட ஒரே நபர், பிலிப் குணவர்தன, இந்திய பிற்போக்காளர்களுக்குத் தம்மை பூரணமாக அடகுவைத்துள்ளதை இவை எடுத்துக் காட்டுகின்றன. ஆனல், இலங்கை மக்கள் தம்மை அடகுவைக்க ஒரு போதும் விடமாட்டார்கள் இது உறுதி.

# இலங்கை கம்யூனி

# 7-வது தேசி

## உத்தேச அரசியல்

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியி
மாநாட்டில் சமர்ப்பிக்க
உத்தேச அரசியல் நகல் அ
வெளியிட்டுள்ளோம்.

7-வது தேசிய மாநாட்டைக்
நியமிக்கப்பட்ட ஸ்தாபகக் கு
கப்பட்டு, கட்சிக் கிளைகளின்
விவாதத்திற்கும் அனுப்ப
வறிக்கை, பின்னர் பூரண
படும்.

இவ்வறிக்கையை, உங்கள்
தித்து, சேர்க்கவேண்டிய அ
டிய பகுதிகளை, அல்லது
பகுதிகளுக்கான சிபாரிசுகளை
தில் அனுப்பிவைக்குமாறு
தவர்களையும் கேட்டுக்கொள்

உலக ரீதியில் சமாதானம், முன்னேற்றம், சோஷலிஸம் ஆகியவற்றிற்குச் சாதகமான சக்திகள் மாற்றமடைந்திருக்கும் காலகட்டத்தில், உலகில் மூன்றில் ஒருபகுதியில் வெற்றியீட்டியுள்ள சோஷலிஸத்தின் நிர்மாணம் மிகவும் துரிதமாக விருத்தியடையும் காலகட்டத்தில், ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கம் வளர்ந்தெழுந்துள்ள காலகட்டத்தில், ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளின் தேசிய சுதந்திர இயக்கங்கள் வெற்றிமேல் வெற்றி ஈட்டிவரும் காலகட்டத்தில், முதலாளித்துவ நாடுகளிலுள்ள பாட்டாளி வர்க்கப் போராட்டம் மேலும் மேலும் உக்கிரமடைந்துவரும் காலகட்டத்தில், இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் ஏழாவது மாநாடு கூடுகின்றது.

### நம் காலகட்டம்

இலங்கையில் உழைக்கும் மக்களினதும், இடதுசாரி சக்திகளினதும் ஐக்கியம் அரசியல் மட்டத்திலும் தொழிற்சங்க மட்டத்திலும் வளர்ந்துவரும் காலகட்டத்தில், அரசாங்கத்தையும், முதலாளிமார்களையும் எதிர்த்துத் தொழிலாளர்களின் கஷ்டமான போராட்டங்கள் அளவிலும், தாக்கத்திலும் பெரிதாக வளர்ச்சியடையும் காலகட்டத்தில் இம்மாநாடு கூடுகின்றது.

மேலும், உலக ரீதியில் திரிபுவாதம் சர்வதேசிய கம்யூனிஸ இயக்கத்தை ஊடுருவி நாசம் செய்தும், அடக்கப்பட்ட நாடுகளினதும் மக்களினதும் புரட்சிகர மக்கள் இயக்கங்களை பலவீனப்படுத்தியும் தடைசெய்தும் வருகின்ற காலகட்டத்தில் இம்மாநாடு கூடுகின்றது.

இலங்கையில் முன்னையப் போலவே பிற்போக்கு பலமானதாக இருக்கின்றபொழுது நடு சக்திகள் ஊசலாட்டத்துடனும், சமரசத் தன்மையுடனும், ஏகாதிபத்திய எதிர்ப்பு நிலப்பிரபுத்துவ எதிர்ப்புக் கடமைகளை முடிப்பதற்கு முன் செல்லமுடியாது, ஏகாதிபத்தியத்திற்கு அடிபணிந்துபோகும் வழமையான அடையாளங்களைக் கூடுதலாகக் காட்டிக் கொண்டுவரும்காலகட்டத்தில் இடதுசாரி இயக்கத்தின் திரிபுவாதத் தலைமை மார்க்சிஸ-லெனினிஸத்தைக் கைவிட்ட காலகட்டத்தில், விஞ்ஞான ரீதியான புரட்சிகரத் தலைமையைப் பாட்டாளி வர்க்கத்திற்கு அளிக்காது அதனை நிராயுதபாணியாக்கியும், தொழிலாள வர்க்கத்தையும் அதன் போராட்டங்களையும் இடதுசாரித் திரிபுவாதத் தலைமை கைவிட்டு வரும் காலகட்டத்தில், விவசாயிகளைப் பற்றி எல்லோரும் பேசியபொழுதும் அவர்களுக்கு ஒருவரும் உதவி செய்யாததோர் காலகட்டத்தில், இடதுசாரி இயக்கத்துக்குள் நவீன திரிபுவாதத்தின் தவறான கருத்துக்களைக்கொண்டவர்களிடையேயும், மார்க்சிஸ-லெனினிஸத்தின் புரட்சிப் பதாகையைத்தளராது உயர்த்திப் பிடிப்பவர்களுக்குமிடையே கூர்மையான தத்துவார்த்தப் போராட்டம் வளர்ந்துள்ள காலகட்டத்தில் இம்மாநாடு கூடுகின்றது.

### அடிப்படைக் கடமைகள்

நடு சக்திகள் வலதுசாரிப் பக்கத்திற்கும், இடதுசாரிப் பக்கத்திற்கும் பிரிந்து போவது தெளிவாகத் தெரிந்துகொள்ளக் கூடியதாக இருப்பதைத் தவிர இலங்கையின் வர்க்க இணைப்புகள் கட்சியின் ஆறுவது மாநாட்டுக் காலத்தில் இருந்ததுபோலவே அடிப்படையில் மாறுதிருக்கின்றன. ஆறுவது மாநாடு விபரித்ததுபோல எமது பொருளாதாரத்தின் பெரும்பகுதி தொடர்ந்தும் விதேச முதலீட்டு நலன்களால் ஆக்கிரமிக்கப்படுகின்றது. கடந்த மாநாட்டின் பின் ஏகாதிபத்திய முதலீட்டு நலன்களை சிலவழிகளில் பாதித்தபொழுதும், எங்கள் நாட்டுப் பொருளாதாரம் அரைக் காலனி தோட்டப் பொருளாதாரமாகவே திகழ்கின்றது. நிலப்பிரபுத்துவம், குறிப்பாக நாட்டுப் பகுதிகளில் பலமாக இருக்கின்றது.

ஆகவே, மக்களின் அடிப்படைக் கடமைகள் ஒன்ருகவே அமைகின்றன. அவை முறையே:

1. ஏகாதிபத்திய எதிர்ப்பு, நிலப்பிரபுத்துவ எதிர்ப்புப் புரட்சியை முடித்தல்,

2. சோஷலிஸத்தை நோக்கி முன்னேறுவதற்கான அடிப்படையை அமைத்தல் ஆகியவையாகும்.

என்ருலும், சில புதிய அம்சங்கள் உள. வலதுசாரிகள் தமது உண்மை உருவத்தைப் புதிய மூடுதிரைகள் மூலம் மறைத்து, தமது சக்திகளை ஒரேயணியில் ஒன்று திரட்டிப் புதியதோர் தாக்குதலுக்கு முயற்சிக்கின்றனர். நடு சக்திகள் மத்திய பாதை என்று கூறப்படுவதன் முடிவுக்கு வந்துவிட்டன. திரிபுவாதத்தின் உயிர்கொல்லும் பாதிப்பினுல் முற்போக்கு சக்திகள் செயல்படாது தடுக்கப்பட்டுள்ளன.

இத்தகைய நிலைமையில் முழு நாட்டினதும், தொழிலாள வர்க்கத்தினதும் விடுதலை இயக்கத்தின் முன்னணிப்படையான கம்யூனிஸ்ட் கட்சிக்குப் பின்வரும் கடமைகள் உள:

(அ) சில பேர்வழிகள் பழசுபட்டுவிட்டது எனக் கூறிய பொழுதும் என்றும்போல் இன்றும் உண்மையாகத் திகழும் மார்க்சிஸ-லெனினிஸத்தின் உலக ரீதியான உண்மைகளை-அடிப்படைப் புரட்சிகரக் கருத்துக்களை திரும்ப வலியுறுத்தல், புத்துயிர் கொடுத்தல்.

(ஆ) சீர்திருத்தவாத, (றிபோமிஸ்ட்) பலவீனமான தலைமையினுல் இயங்காது இருக்கும் இடதுசாரி இயக்கத்திற்குத் திரும்ப வலிவு கொடுத்தல். இடதுசாரி இயக்கத்திற்குப் புதிய உண்மையான புரட்சிகரத் தலைமை அளித்து அதன் மூலம் ஏகாதிபத்திய எதிர்ப்புப் புரட்சியைப் பூரணமாக்குவதற்கும், சோஷலிஸத்தை நோக்கி முன்னேறுவதற்கான அடிப்படையை அமைப்பதற்கும் சகல ஏகாதிபத்திய எதிர்ப்புச் சக்திகளையும் ஐக்கியப்படுத்தல்.

"இந்த நிலைமையில் கம்யூனிஸ்ட் கட்சியின் ஏழாவது மாநாடு, ''புரட்சிகரக் கருத்துக்களுக்காகவும், இலங்கைப் புரட்சியின் நிச்சயமான துரித வளர்ச்சிக்காகவும் திரிபுவாதத்தை எதிர்த்த மார்க்சிஸ-லெனினிஸ்டுகளின் மாநாடாகும்.''

### முற்றுப்பெருத கடமைகள்

ஏகாதிபத்திய எதிர்ப்பு, நிலப்பிரபுத்துவ எதிர்ப்புக் கடமைகளைப் பூரணமாக்கத் தவறிய காரணத்தால் எமது நாட்டுச் சமுதாய, பொருளாதார அடிப்படை மாருதிருப்பதால் இலங்கையில் பிற்போக்கு வளரமுடிகின்றது. இந்த அடிப்படைகளில் சில உடைவுகள் ஏற்படுத்தப்பட்டாலும், அவை முற்ருக முறியடிக்கப்படவில்லை.

மக்களிடையே இன்னும் ஆழமாகவுள்ள மூடப் பழக்கவழக்கங்களையும், விருப்பு வெறுப்புக்களையும் பிற்போக்கு பூரணமாகப் பாவிக்கின்றது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்க இயந்திரத்தைப் புனருத்தாரணம் செய்யத் தவறியதால் அரசாங்க இயந்திரத்துள் செயல்படும் பிற்போக்குத்தனம் முறியடிக்கப்படவில்லை. முற்போக்கு சக்திகள் முதலாளித்துவ ஜனநாயகத்தினதும், பாராளுமன்றத்தினதும் வரையறைகளை அம்பலப்படுத்த தவறியதால், பிற்போக்கின் தத்துவார்த்த தளம் முறியடிக்கப்படவில்லை.

### வலதுசாரி தந்திரம்

இலங்கைப் பிற்போக்கு இருவிதமான தாக்குதலை ஒழுங்கு செய்கின்றது. (1) சோஷலிஸ்ட் என்ற பெயரில், தவறுகளை உணர்ந்து திருத்திக் கொண்டதாகவும், மக்களின் விருப்பத்திற்கியையவும், ஜனநாயகப் போராட்டத்திற்காகவும், தனது கைவந்த கலையான லஞ்சத்தின் மூலம் தேர்தலுக்குத் தயாராகின்றது. (2) அதே நேரத்தில், முற்போக்கு இடதுசாரி இயக்கத்தைத் தாக்குவதற்காகவும், 1956–க்குப் பின் மக்கள் பெற்ற வெற்றிகளைப் பறிப்பதற்காகவும் வெளிநாட்டு ஏகாதிபத்தியவாதிகளின் உதவிகளுடன் சதிச் சக்திகளைத் திரட்டுகின்றது. இந்த நோக்கத்தை அடைவதற்காக ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியின் வலதுசாரியினருடன் கூட்டு சேர்ந்து, பிற்போக்கு ஐக்கிய முன்னணி ஒன்றை இந்த நாட்டில் உருவாக்குகின்றனர். அரசாங்கத்தின் கொள்கைகளால் தமது சலுகைகளை இழந்த வர்க்கங்களின் வெறுப்பையும், தமது அவசரப் பிரச்சினைகளை அரசாங்கம் தீர்க்கத் தவறியதன் விளைவாக அவதிப்படும் சாதாரண மக்களின் ஆத்திரத்தையும், வெறுப்பையும் இந்த இரண்டு முயற்சிகளுக்கும் அவர்கள் பூரணமாகப் பாவிக்கின்றனர்.

அமெரிக்க, பிரிட்டிஷ், மேற்கு ஜெர்மனிய ஏகாதிபத்தியவாதிகளின் புதிய காலனி முறை ஊடுருவல் முயற்சிகளுடன் யூ. என். பி-யின் தந்திரங்கள் ஒன்று சேர்கின்றன.

இந்த நாட்டின் தேசிய சிறுபான்மையினரின் மொழிப் பிரச்சினைகளுக்கும், இந்திய வம்சாவளித் தொழிலாளர்களின் பிரச்சினைகளுக்கும் திருப்தியான தீர்வுகாணத் தவறியதன் விளைவாக, இந்த நாட்டில் தேசிய ஐக்கியம் குன்றியது. ஏகாதிபத்தியவாதிகளும் உள்நாட்டுப் பிற்போக்கும் சதிவேலைகளில் ஈடுபடுவதற்கு உகந்த இடமாக எமது நாட்டை ஆக்குகின்றது. கட்சியின் 6-வது மாநாடு முன்வைத்த கொள்கைகளின்படி இப்பிரச்சினைகளுக்குத் திருப்தியான தீர்வு காண்பதன் மூலமே தேசிய செல்வம் அனைத்தையும் தேசிய நிர்மாணத்துக்காகப் பாவிக்கக்கூடிய நிலைமையைச் சிருஷ்டிக்க முடியும்.

### வெற்றிக்கான தலைமை

ஆகவே, பிற்போக்கை அழித்தொழிப்பதற்கு, ஏகாதிபத்திய எதிர்ப்புச் சக்திகள் அனைத்தையும் ஒன்று திரட்டுவது எமது பிரதான கடமையாகவுள்ளது. இந்த அணியின் தலைமையில் தேசிய முதலாளி வர்க்கம் இருக்கும் வரையும் இக்கடமையைச் செய்ய முடியாதாகையால், தொழிலாள வர்க்கம் இவ்வணியின் தலைமையில் வருவதற்காக ஏகாதிபத்திய எதிர்ப்பு அணியிலுள்ள சக்திகளின் பலத்தை மாற்றுவதே எமது இன்றைய அவசரத் தேவையாகும். உண்மையில், திரிபுவாதிகளுக்கும் மார்க்சிஸ-லெனினிஸ்டுகளுக்குமிடையே உள்ள பிரதான வித்தியாசங்களுள் ஒன்று, ஏகாதிபத்திய எதிர்ப்பு, ஜனநாயகப் புரட்சியில் தொழிலாள வர்க்கத்தின் தலைமைப் பாத்திரம் பற்றியதாகும்.

### நாலாவது காங்கிரஸ் முடிவுகள்

எங்கள் கட்சியின் 4-வது மாநாட்டில் நாம் இடதுசாரி ஒருமுனைவாத (செக்டேறியன்) வலதுசாரித்திரிபுகளைத்திருத்தி, தொழிலாள வர்க்கம், விவசாயிகள், குட்டி முதலாளிகள், தேசிய முதலாளிகள் ஆகிய ஏகாதிபத்தியத்திற்கும் நிலப்பிரபுத்துவத்திற்கும் எதிர்த்த எல்லா வர்க்கங்களும் உள்ளடங்கிய தேசிய ஜனநாயக முன்னணிக்காகப் போராடும் சரியான மார்க்சிஸ்ட் கொள்கையை ஏற்றுக்கொண்டோம். ஆனுல், இவ்வணியின் தலைமையில் நிச்சயமாகத்தொழிலாளி வர்க்கமே இருத்தல் வேண்டும் என நாம் வகுத்துக்கொண்

# யூனிஸ்ட் கட்சியின்
# சிய மாநாடு!

## ல் நகல் அறிக்கை

ஸ்ட் கட்சியின் 7-வது தேசிய
சமர்ப்பிக்கப்பட விருக்கும்
நகல் அறிக்கையை இங்கு
ாம்.

ாநாட்டைக் கூட்டுவதற்காக
தாபகக் குழுவினால் தயாரிக்
கிளைகளின் பரிசீலனைக்கும்,
அனுப்பப்பட்டுள்ள இவ்
னர் பூரணத்துவப் படுத்தப்

, உங்கள் கிளைகளில் விவா
ண்டிய அல்லது நீக்கவேண்
அல்லது மாற்றவேண்டிய
சிபாரிசுகளை கூடிய சீக்கிரத்
க்குமாறு சகல கட்சி அங்கத்
ட்டுக்கொள்கிறோம்.

டோம். இல்லாவிட்டால் அது சமரஸத்தில் முடியுமென நாம் எச்சரிக்கை செய்தோம்.

உலகப் புரட்சியின் ஆரம்பமாகிய அக்டோபர் புரட்சிக்குப் பின், எல்லா முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சிகளும் உலக சோஷலிஸப் புரட்சிகளின் பகுதியாயுள்ளன. சொந்தத் தொழிலாளர் வர்க்கத்தின் பலம் வளர்வதைக் கண்டும், சோஷலிஸத்திற்கு முதலாளி வர்க்கம் பயப்படுவதனால் இப் புரட்சிகள் பூரண வெற்றியடையும் வரை அதனால் தலைமைதாங்க முடியாது.

இதனால்தான், உலக சோஷலிஸம் மனித சரித்திரத்தில் தீர்க்கமான அம்சமாகத் திகழும் புதிய நிலைமைகளின் கீழ், தொழிலாள வர்க்க சக்திகள் பெருமளவிற்கு வளர்ந்துள்ள நிலையில் ஏற்படும் இந்த ஜனநாயகப் புரட்சிகளை, அவை வெற்றியீட்ட வேண்டுமென்றால், சமுதாயத்தின் உறுதியான புரட்சிகர வர்க்கமாகிய தொழிலாள வர்க்கம் தலைமை தாங்குதல் வேண்டும். தொழிலாளி வர்க்கம் தனது தலைமையில் சகல ஏகாதிபத்திய எதிர்ப்பு, நிலப் பிரபுத்துவ சக்திகளையும் ஒன்று திரட்டி, அவற்றை முதலில் ஏகாதிபத்திய எதிர்ப்பு, நிலப் பிரபுத்துவ எதிர்ப்புக் கடமைகளை நிறைவேற்றுவதற்காகவும், இரண்டாவதாக, அதன் நேச வர்க்கங்களைச் சோஷலிஸத்தின் வெற்றிக்கா முன்னிழுத்துச் செல்லல் வேண்டும். இதையேதான் சீனக் கம்யூனிஸ்ட் கட்சி நிறைவேற்றியுள்ளது. 4—வது கட்சி மாநாட்டில் எங்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட கருத்து இதுவே.

ஜனநாயகப் புரட்சியில் தொழிலாள வர்க்கம் வகிக்கும் தலைமையான பாத்திரம் பற்றிய இத்தகைய முக்கிய புரட்சிக் கருத்து மிகவும் பூடகமாக, எதுவித விவாதமுமின்றி 6—வது மாநாட்டிற்குச் சமர்ப்பித்த அரசியல் அறிக்கையில் விடப்பட்டுள்ளது. அஜாக்கிரதையினால் நாம் அதைக்கவனிக்கவில்லை. ஆனால், அக்கருத்தைக் கைவிட்டது தற்செயலாக நடைபெற்ற ஒன்றல்ல. திரிபுவாதத்திற்கு சரணாகதி அடைவதற்கான ஆரம்பத்தின் அடையாளமே அது.

இதே ரீதியில் தான் இந்த நாட்டில் தொழிலாள வர்க்கம் இல்லை எனும் கருத்தைத் திரிபுவாதிகள் பிரச்சாரம் செய்து வருகின்றனர். தொழிலாள வர்க்கத்தின் தலைமைப் பாத்திரத்தை மறுப்பதற்கு, முதலில் இந்த நாட்டில் தொழிலாள வர்க்கம் இல்லை என்று நிரூபிப்பது அவசியமாகின்றது. இத்தகைய மார்க்சிஸ விரோதக் கொள்கைகளை நாம் மறுத்துரைத்தல் வேண்டும். எமது நாட்டு வயது வந்தவர்களின் ஜனத்தொகையில்பெரும்பான்மையினர் சம்பளத்திற்கு வேலை செய்பவர்கள் என்பதையும், அவர்களின் தொகை 25—லட்சம் என்பதையும். இவர்களில் 15—லட்சம்பேர் தொழிற் சங்கங்களில் ஸ்தாபன ரீதியாகத் திரண்டுள்ளனர் என்பதையும் நாம் உணருதல் வேண்டும். முழு வயது வந்தவர்களின் ஜனத்தொகையில் இது கணிசமான பகுதியாகும். தொழிலாளி வர்க்கம் இல்லை என்ற கொள்கை இதனால் கருத்தற்றதாகின்றது.

ஜனநாயகப் புரட்சியில் ஏகாதிபத்திய எதிர்ப்பு, நிலப் பிரபுத்துவக் கடமைகளை பூரணமாக்கவும், அதன் பின் நாட்டை சோஷலிஸப் புரட்சியின் வெற்றிக்கான முற்போக்குப் பாதையில் கொண்டு செல்வதற்கும் தொழிலாள வர்க்கத்தினது தலைமைப் பாத்திரத்தின் புரட்சிக் கருத்தை 7-வது மாநாடு வலியுறுத்துவது அவசியமாகும்.

### மத்திய பாதை

மத்திய பாதை என்று கூறப்படுவதன் நெருக்கடியை ஸ்ரீ லங்கா அரசாங்கம் எதிர் நோக்குகின்றது. பொருளாதாரத்தில் ஏகாதிபத்தியவாதிகளுக்கு இருக்கும் பிடியைத் தகர்க்கப் பலமற்றும் மறுத்தும் வருவதனாலும், வெளிநாட்டு முதலீட்டு நலன்களைப் பாதித்துத் தேசிய பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்க்க மறுப்பதனாலும் அவர்கள் தங்களால் தீர்க்க முடியாததோர் பொருளாதார நெருக்கடிக்கு இலங்கையைக் கொண்டுவந்துள்ளனர். மக்களைப் பாதிக்கும் நடவடிக்கைகளில் ஸ்ரீலங்கா அரசாங்கம் ஈடுபட்ட முயற்சிகளை மக்கள் பலமாக எதிர்த்துள்ளனர்.

கைலஞ்சமும், திறமையீனமும் பரிபாலனம் முழுவதுமே தேங்கிக் கிடக்கின்றது. ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கம் இவற்றைத் தீர்க்க முடியாதிருப்பது மக்களிடையில் பெரும் அதிருப்தியை உண்டாக்கியுள்ளது. இதன் விளைவாக மக்கள் விரோத, முற்போக்கு விரோத சக்திகள் போதுமான குழப்படியையும் குழறுபடியையும் உண்டு பண்ணக்கூடிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

ஏகாதிபத்திய எதிர்ப்பு வேலைத் திட்டத்தின் பின்னால் நாட்டை ஒன்று திரட்டத் தவறியதால் நாட்டிலேயும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சிக்குள்ளேயும் பிரவினைத் தன்மைகள் உருவாகியுள்ளன. ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் பாராளுமன்ற ஆதரவை ஒற்றுமையாக வைத்திருப்பதன் அவசியமும், தொழிலாள வர்க்கத்தினதும் இடதுசாரி இயக்கத்தினதும் பெருகிவரும் பலமுமே இன்று ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியை ஐக்கியப் படுத்தும் அம்சங்களாகும்.

பொருளாதார ரீதியில் வர்க்கம் என்ற முறையில் வளர்ச்சி பெறாத ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி பிரதிநிதித்துவப் படுத்தும் தேசிய முதலாளிவர்க்கம், இலங்கையில் இடதுசாரிகளின் தீவிர ஆதரவின்றி ஆட்சிபெற முடியாதென்ற விசேஷமான குறைபாட்டினால் கஷ்டப்படுகின்றது.

வலதுசாரி சக்திகளுக்குப் பயந்தும், இடதுசாரிகளில் அவநம்பிக்கை கொண்டும் திகழும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கம், படிப்படியாக இராணுவ ஆட்சியை நோக்கி முன் செல்கின்றது. இந் நடவடிக்கை மக்களுக்கு எதிரானதேயன்றி, பிற்போக்குக்கு எதிரானதல்ல என்பதை அதன் உருவங்களும், முறைகளும் காட்டுகின்றன. அரசாங்கம் வலதுபக்கம் திரும்புகின்றது என்பதை அதன் சம்பள உயர்வு நிறுத்தக் கொள்கைகள், வேலை நிறுத்தங்களை உடைப்பதற்குப் போலிஸ்-இராணுவத்தைப் பாவித்தல், வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்த மறுத்தல் முதலிய தவறான தொழிலாளி வர்க்க விரோத நடவடிக்கைகளிலிருந்து அறிந்து கொள்ளலாம்.

ஆனாலும், ஏகாதிபத்தியத்தையும் பிற்போக்கையும் எதிர்த்த போராட்டத்தில், ஸ்ரீ லங்கா சுதந்தி க் கட்சி பிரதிநிதித்துவப்படுத்தும் நடு சக்திகளை நாம் பூரணமாக உதாசீனம் செய்தல் முடியாது. ஊசலாட்டம், ஏகாதிபத்தியத்திற்கு விட்டுக்கொடுத்தல் போன்ற தன்மைகள் இருந்த பொழுதும். ஐக்கிய இடதுசாரி இயக்கத்தின் தலைமையில் அமையும் ஏகாதிபத்திய எதிர்ப்பு அணியில் ஒன்று திரட்டுவதற்கு வென்றெடுக்க வேண்டிய கணிசமான பகுதிகள் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியில், விசேஷமாக கிராமப்புற ஜனத்தொகையிடையேயும், தேசிய புத்தி ஜீவிகளிடையேயும் இருக்கின்றனர்.

### தொழிலாளி வர்க்க ஐக்கியம்

இடதுசாரி இயக்கத்தின் துரதிருஷ்டம் அது ஐக்கியமற்றிருந்ததேயாகும். பாட்டாளி வர்க்கப் புரட்சியின் வெற்றிக்கு, தனியொரு மார்க்சிஸ-லெனினிஸக் கட்சியின் தலைமையில் தொழிலாளி வர்க்கத்தின் ஐக்கியம் அவசியமாகும். ஆகவே இன்று ஏற்பட்டுள்ள ஓரளவு ஐக்கியத்தை நாம் வரவேற்கிறோம்.

இன்று ஏற்பட்டுள்ள ஒப்பந்தத்தை இலங்கைப் புரட்சியை முன்னெடுத்துச் செல்லக்கூடிய பலமான, சக்திவாய்ந்த ஐக்கியமாகக் கட்டி எழுப்புவதே எமது அவா.

ஏகாதிபத்தியத்தையும் நிலப் பிரபுத்துவத்தையும் எதிர்த்த ஜனநாயக ஐக்கியம் பல வர்க்கங்கள் அடங்கிய வேலைத் திட்ட ஒப்பந்தமாகும். ஆனால் தத்துவார்த்தஅடிப்படையிலே தொழிலாள வர்க்கம் என்ற தனியொரு வர்க்கத்துக்கு இடையே ஏற்படும் ஐக்கியமே இடதுசாரி ஐக்கியம். தொழிலாளி வர்க்கம் சரியான ஒரு தத்துவத்தைத் தான் கொண்டிருக்க முடியும். அதுவே மார்க்சிஸ — லெனினிஸம். ஆகவே அதன் ஐக்கியம் தத்துவார்த்த அடிப்படையில் அமைதல் வேண்டும். ஜனநாயக ஐக்கியம், ஏகாதிபத்திய எதிர்ப்பு கடமைகளைச் செய்துமுடிப்பதற்கானதாகும்., ஆனால் ஜனநாயக ஐக்கியத்தின முக்கிய அணியாகவும், தலைமையிலும் இருக்கவேண்டிய இடதுசாரி இயக்கம் சோஷலிஸத்தை நோக்கி முன்னேறும் சரித்திரக கடமையைச சாதிக்க வேண்டியிருக்கின்றது. "முழு இடதுசாரி இயக்கத்துக்கும் சரியான பொது மார்க்சிஸ — லெனினிஸக் கொள்கைக்கான தொடர்ச்சியான கொள்கை ரீதியிலமைந்த தத்துவார்த்தப் போராட்டத்தை" எங்கள் கட்சியின் 6—வது மாநாடு முன் வைத்தது. துரதிருஷ்டவசமாக 6—வது மாநாட்டின் இக் கொள்கை அமுல் படுத்தப்படவில்லை. இன்று ஏற்பட்டுள்ள ஒப்பந்தம, கொள்கைகளிலும் தந்திரோபாயங்களிலும் பூரண ஒப்பந்தத்தைக் கட்சிகளிடைய காண்பதற்கான தத்துவார்த்தப் பேச்சுவார்த்தைகளின் அடிப்படையில் ஏற்படவில்லை ஆனால், பாராளுமன்றம் மூலமாக மட்டும் ஆட்சியைப் பெறும் அவாவின் அடிப்படையில, இரகசிய பேச்சுவார்த்தைகள் மூலம் ஏற்படுத்தப்பட்டதாகும். இருபது வருடகாலமாக ஒற்றுமையற்று இருந்த இடதுசாரிக் கட்சிகள் ஒப்பந்தத்திற்கு வரும் பொழுது மக்களும கட்சி அங்கத்தவர்களும் இக் கட்சிகள் என்ன அடிப்படையில் ஒப்பந்தத்திற்கு வந்துள்ளன என்பதை அறிவதற்கு உரிமை உண்டு. உதாரணமாக பாட்டாளிவர்க்க சர்வாதிகாரம் மூலமே சோஷலிஸத்தை வெல்லலாம் எனக் கம்யூனிஸட் கட்சி கருதுகின்றது. லங்கா சமசமாஜக கட்சியும், மகாஜன எகசத் பெரமுனையும் இதனை ஏற்றுக் கொள்ளவில்லை. கம்யூனிஸ்ட் கட்சி இக்கொள்கையைக் கைவிட்டு விட்டதா? அன்றி, இலங்கை சமசமாஜக்கட்சியும், மகாஜன எக்சத் பெரமுனையும் இதனை ஏற்றுக் கொண்டுள்ளனவா?

கொள்கை அடிப்படையற்ற ஐக்கியத்தைச் சிருஷ்டித்தால் அது ஸ்திரமற்றதாகவும், உடைந்து போகக் கூடியதாகவும் அமையும். இதன் காரணமாகத்தான் ஒவ்வொரு இடதுசாரிக் கட்சிகளிடையேயும், இடதுசாரி ஐக்கிய முன்னணியிலும், இடதுசாரி ஐககிய முன்னணி பின்பற்ற வேண்டிய கொள்கைகளும் தந்திரங்களும் பற்றி பிளவுகள் ஏற்பட்டுள்ளன.

### முன்னுள்ள கடமைகள்

இலங்கைப் புரட்சியின் தற்போதைய கட்டத்தில் தொழிலாள வர்க்கத்தின் முன்னால் இரு கடமைகள் உள. முதலாவது, சகல ஏகாதிபத்திய எதிர்ப்பு, நிலப்பிரவுத்துவ எதிர்ப்பு சக்திகளையும ஒன்று திரட்டி, ஏகாதிபத்திய எதிர்ப்பு, நிலப்பிரபுத்துவ எதிர்ப்புக் கடமைகளைப் பூரணமாக்குவதற்காக அவற்றைத் தலைமை தாங்கிச் செல்லுதல். இரண்டாவது, சோஷலிசத்தை வென்றெடுப்பதற்காக நாட்டை முன்னெடுத்துச் செல்லுதல். தொழிலாள வர்க்கத்தைப் பிரதிநிதித்துவப் படுத்தும் கட்சிகள் எனற முறையிலும், சோஷலிசத்துக்காக நிற்கும் கட்சிகள் என்ற முறையிலும், இடதுசாரிக் கட்சிகளிடையே ஏற்படக்கூடிய எந்த ஒப்பந்தமும் இந்த இரு கடமைகளையும் பூரணமாக்குவதை உள்ளடக்கியதாக அமைதல் வேண்டும். தற்பொழுதைய இடதுசாரி ஐக்கிய முன்னணி ஒப்பந்தம் முதல் கடமை பற்றியதே. இதனால்தான் இவ்வொப்பந்தம் பூரணமற்றது.

(6-ம் பக்கம் பார்க்க)

# கட்டி வளர்த்தோம் - சிதைக்க விடோம்

## சீர்குலைவாளர்களை சிதறடியுங்கள்

### தேயிலை, றப்பர் தொழிற்சங்க தலைவர்கள், செயலாளர்கள் வேண்டுகோள்

முழுத் தொழிற்சங்க இயக்கமும் 21 கோரிக்கைகளுக்கு ஆதரவாக பொதுப் போராட்டத்திற்கு தயாராகிக் கொண்டிருக்கும் இவ்வேளையில், முழுத் தொழிற்சங்க இயக்கத்தினதும் ஆகக்கூடிய ஐக்கியம் அவசியமாயிருக்கும் பொழுது, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் திரிபுவாதத் தலைமை, சி. டி. யூ. எப்-பின் பொதுச் செயலாளரான தோழர் நா. சண்முகதாஸனுக்கெதிரான துஷ்பிரச்சார அவதூறுப் போராட்டத்திலும், சி. டி. யூ. எப்-புக்கு எதிராக சீர்குலைவு வேலைகளிலும் ஈடுபடுவதற்கு இச் சந்தர்ப்பத்தை தெரிந்தெடுத்துள்ளது மட்டுமல்லாமல், போட்டி தொழிற்சங்க மத்தியஸ்தானம் ஒன்றை அமைக்க வேண்டுமென்ற கருத்தை முன்வைக்குமளவிற்குக் கீழ்த்தரத்திற்கு சென்றுள்ளது,

உண்மை விபரங்களைத் தொழிலாள வர்க்கத்திற்கு முன்வைப்பதற்கும், தமது இரத்தத்தாலும் வியர்வையாலும் கட்டி எழுப்பிய ஸ்தாபனத்தின் ஐக்கியத்தைப் பாதுகாக்க அவசியமான நடவடிக்கைகளை எடுக்குமாறு அவர்களுக்கு அழைப்பு விடவும், இந் நிலைமை எங்களை நிர்ப்பந்தித்துள்ளது.

இன்று இந்த நாட்டு முழுத் தொழிற்சங்க இயக்கமும் பொதுக் கோரிக்கைகள் 21ன் பின்னால் ஓரளவு ஐக்கியத்தையடைந்திருப்பதில், கூட்டுத் தொழிற்சங்க நடவடிக்கைப் பேச்சுவார்த்தைகளை முன்நின்று ஆரம்பித்த சி. டி. யு. எப். தலைமைக்கு பெரும் பங்குண்டு. 15-வது மாநாட்டிற்கு பின்னர் இரண்டாண்டுக் காலத்தில் சி. டி. யு எப் நண்பர்களாலும், எதிரிகளாலும் ஏற்றுக் கொள்ளக் கூடியளவிற்கு இலங்கையிலுள்ள மிகவும் முக்கியமான, பலம் வாய்ந்த தொழிற் சங்க மத்தியஸ்தானமாக வளர்ந்தும், விருத்தியடைந்துமிருப்பதற்கு சி. டி. யு. எப். பின்பற்றிய சரியான போராட்ட, புரட்சிகரக் கொள்கையேகாரணமாகும். தனியார் துறையிலுள்ள தொழிலாளர்களுக்கு அரசாங்களவு பஞ்சப்படி போன்ற, பிரமாண்ட பொருளாதாரக் கோரிக்கைகளை இந்த நாட்டுத்தொழிலாள வர்க்கத்திற்கு வென்றெடுத்த தொழிற்சங்க மத்தியஸ்தானம் சி. டி. யு எப். ஆகும். இதனால் தான் தொழிலாளர்களின் புதிய பகுதிகள் ஒவ்வொன்றும் சி. டி. யு. எப். பின், புரட்சிகரக் கொடியின் கீழ் ஒன்று திரள்கின்றன.

இவ்வெற்றிகள் அனைத்திலும் சி. டி. யு. எப். பொதுக்காரியதரிசியான தோழர் நா. சண்முகதாசன் பெரும் பங்கு வகித்துள்ளார். 1958 ஏப்ரல்—மே ஐந்து வார வேலை நிறுத்தம், இ. போ. ச. ஊழியர்களின் இவ்வருட சரித்திர முக்கியத்துவம் மிகு வேலை நிறுத்தம், வெள்ளவத்தை ஆலைத் தொழிலாளர்களின் கஷ்டமான இரு வேலை நிறுத்தங்கள் போன்ற சி.டி.யு.எப். போராட்டங்களுக்குத் தலைமை தாங்குவதிலும் சரி, கைத்தொழில் கோடுகளில் அல்லது தொழில் கோடுகளில் தொழிலாளருக்குப் போராடுவதிலும் சரி, எஞ்சினியரிங், தேயிலை, ரப்பர் ஏற்றுமதித் தொழிலாளர்களுக்கு அரசாங்க அளவு பஞ்சப்படியை வென்று கொடுத்த 1950 கூட்டு ஒப்பந்தம் இல. 1ஐ இலங்கை முதலாளிமார் சம்மேளனத்துடன் வாதிட்டு வென்றதிலும் சரி, தோழர் சண்முகதாசன் வகித்த பங்கு மிகவும் மகத்தானதாகும்.

தொழிலாள வர்க்கத்திற்கு அவரின் சேவை அவசியமான இக் கட்டத்தில் தான் இத்தகைய மதிப்புக்குரிய தோழர் சண்முகதாசனை இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் திரிபுவாதத் தலைமை கட்சியிலிருந்து நீக்கியுள்ளது. இந்த அடி சண்முகதாசனுக்கல்ல; முழுத் தொழிலாள வர்க்க இயக்கத்துக்கும் விழுந்த அடியாகும். இந் நடவடிக்கை பிற்போக்குவாதச் சக்திகளுக்கும், குறிப்பாக இனிமேல் போராடுவதற்குச் சண்முகதாசன் இல்லை என எதிர்பார்க்கும் முதலாளிமார்கட்கும் மகிழ்ச்சி அளிப்பதாகும்.

அவரைக் கட்சியிலிருந்து விலக்கியதுடன் திருப்தியடையாது, தோழர் சண்முகதாசனுக்கு எதிராகத் திரிபுவாதத் தலைவர்கள் அவரை அவமானம் செய்யும் நோக்கத்துடனும், தொழிலாள வர்க்கத்திடமிருந்து அவரைப் பிரிக்கும் நோக்கத்துடனும் தனிப்பட்ட போராட்டமொன்றை நடாத்துகின்றனர். வகுப்புவாதம் உட்பட மோசமான துஷ்பிரச்சாரமும், அவதூறும் செய்து தொழிலாளர்களை மயக்கவும், குழப்பவும் முயல்கின்றனர். இச் சீர்குலைவாளர்களுக்குப் பதிலிறுக்க வேண்டும். தொழிலாள வர்க்கத்தின் பக்கம் அவர்கள் திரும்பவும் தலைகாட்டாத வண்ணம் அவர்களுக்கு பதிலளிக்க வேண்டும்.

திரிபுவாதிகளின்படி தோழர் சண்முகதசன் இழைத்த ''மாபெரும் தவரு'' புரட்சிகரக் கொள்கைகளை முன் வைத்ததும், சமுதாய மாற்றத்தைச் சீக்கிரம் கொண்டு வரல் வேண்டும என்று ஆவலுடையவராயிருப்பதுமேயாகும். இ போ. ச. வேலைநிறுத்தத்திற்குத் துரோகம் செல்வதில் பங்கு கொள்ளாததும், வெள்ளவத்தை ஆலை வேலைநிறுத்தத்திற்கு உறுதியான தலைமை கொடுத்ததும் அவரின் ''மாபெருங்குற்றமாகும்'' ஆனால் தொழிலாளி வர்க்கத்தின் முன்னணியில் இவைகள் குற்றமாகாது. தொழிலாள வர்க்க இயக்கத்தின் தலைவர்களுக்கு அவசியமான தகுதிகள் இவை. திரிபுவாதிகளின் பொய்களால் தொழிலாளர்கள் மயக்கமடைய மாட்டார்கள்; சி. டி. யு. எப். வினதும், அதன் பொதுக்காரியதரிசின் பின்னாலும் அவர்கள் உறுதியாகத் திரள்வார்கள்; ஆண்டுக்கணக்கான உழைப்பினால் உருவாகிய தமது ஸ்தாபனங்களை சீர்குலைவாளர்கள் நாசம் செய்வதை அவர்கள் தடுப்பார்கள்.

இவ்வருடம் ஜனவரி மாதத்திலிருந்து 'தொழிலாளி' பத்திரிகையைத் திரும்பவும் வெளியிடுவதிலும் நவம்பர் 1-ந் திகதியிலிருந்து அதனை வாரப் பத்திரிகையாக வெளியிடுவதிலும் அவர் வகித்த பங்கு பற்றியும் குறிப்பிடுதல் வேண்டும் 'தொழிலாளிக்கு' அவர் எழுதிய தத்துவக் கட்டுரைகள் மூலம் அவர் தொழிலாள வாக்கத்திற்கு விஞ்ஞான பூர்வமான சோஷிலிஸக் கொள்கைகளைப் போதித்து மகத்தான சேவை செய்துள்ளார். 'தொழிலாளி' பத்திரிகைக்கு அது இன்றிருக்கும் செல்வாக்கை அது மற்றெல்லா இடதுசாரி வாரப் பத்திரிகைகளிலும் கூடுதலாக விற்பனையாவதிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

இக் காரணங்களுக்காகவே சி டி.யு.எப். பின் முழு அங்கத்தவர்களும் தோழர் சண்முகதாசனில் நம்பிக்கை தெரிவித்துள்ளனர். கம்யூனிஸ்ட் கட்சி அவரை நீக்கியதைக் கண்டித்துள்ளனர். இலங்கை மோட்டார் தொழிலாளர் சங்கம், இலங்கை தோட்டத் தொழிலாளர் சங்கம், இலங்கை சினிமா பில்ம் ஸ்டுடியோ ஊழிர்ய சங்கம் ஆகியவற்றன் பொதுச் சபைக் கூட்டங்களிலும், தேயிலை, ரப்பர், தெங்கு பொது உற்பத்தித் தொழிலாளர் சங்கம், இலங்கை அச்சுத் தொழிலாளர் சங்கம் ஆகியவற்றின் கூட்டு பக்டரி கமிட்டிகளிலும், ஜின் தோட்ட மர பாக்டரி தொழிலாளர் சங்கம், ஐக்கிய என்ஜினியரிங் தொழிலாளர் சங்கம் ஆகியவற்றின் வருடாந்த மகாநாடுகளிலும் தோழர் சண்முகதாசனில் நம்பிக்கை தெரிவிக்கும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

சி.டி.யு.எப். பின் முழு அங்கத்தவர்களையும், சி.டி.யு எப்-பின் சரியான, போராட்டப் புரட்சிக் கொள்கையின் பின்னால் ஒன்று திரளுமாறும், அதன் ஐக்கியத்தைப் பாதுகாக்குமாறும் தனியொரு பாக்டரியிலே, வேலைத் தலத்திலோ கூட சீர்குலைவாளர்கள் வெற்றி பெறுவதைத் தடுக்குமாறும் நாம் கேட்டுக்கொள்கின்றோம்.

சி. டி. யு. எப்-பின் 16-வது மாநாடு நோக்கி முன்செல்வோம்! எதிர்காலத்தில் மேலும் பல வெற்றிகள் காண்போம்!!

21 கோரிக்கைகளை வென்றெடுப்போம்! தனியொரு தொழிற்சங்க மத்திய ஸ்தானம் அமைப்போம்!

செயலாளர் கே. விக்டர்-புறாக் பொன்ட், தலைவர் சீ.பி. வீரக்கோன்-காசன், செயலாளர் என். சாஹுல் ஹமீட்-ரவுலி டேவிஸ், செயலாளர் பீ. எல். வில்சன்-மெக்வுட், தலைவர் எம். கே. ஆரியதாச-மெக்வுட். தலைவர் கே. மொஹிதீன் பிச்சை-சிலோன் ட்ரேடிங், தலைவர் சீ. த. கொஸ்தா-பீ. சீ. சீ., தலைவர் கே. கே. ஏ. காதர்-வீட்டோல் பவுஸ்டட், தலைவர் டீ. எஸ். மாட்டின்-புறாக் பொன்ட், தலைவர் டபிள்யூ. ஏ. வில்சன்-புறாக் பொன்ட், செயலாளர் சந்திரதாச-ஹீத், செயலாளர் பீ.ஏ. டீ. ஏமிஸ்சிங்கோ-கோர்டன் பிரேசா, செயலாளர் யூ. டி. சிமியோன் ஏ. எப். ஜோன்ஸ், தலைவர் எச். பீ. சில்வா-ஏ.எப். ஜோன்ஸ், செயலாளர் க்ளேரா குணவர்தன-ஈ. பீ. கிரீசி, செயலாளர் ஜே. எஸ். ஜோசப்-ஈ. பீ. கிரீசி(தேயிலைப் பகுதி), செயலாளர் ஆர்.எம். மாட்டின் சிங்கோ-விட்டோல் பவுஸ்டட், ஆர். பீ. டேவிட்-லீச்மன், கே. ஜி பெரேரா-மகவிலை மில்ஸ், எம். பீ. தர்மசேன-மகவிலை மில்ஸ், கே. ஏ. த சில்வா—ஆதம்ஜி லுக்மன்ஜி – டீ. ஜீ. ரொபட்-ஜோன்கீல்.

## புதுத் தலைமை உருவாகட்டும்

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

### பூரணமற்ற ஐக்கிய ஒப்பந்தம்

முதல் கட்டமை பற்றிய வேலைத்திட்டத்தில் ஒப்பந்தம் ஏற்பட்டதே தவிர, இம் முதல் கடமையைச் சாதிபபதற்குப் பின்பற்ற வேண்டிய சரியான தந்திரோபாயங்கள் பற்றி ஐக்கிய இடதுசாரி முன்னணியில் ஒப்பநதம் ஏற்படவில்லை. அது முழுக்க முழுக்க பாராளுமன்ற முறையிலா? அல்லது தொழிலாள வர்க்கம் சமதான மற்ற முறையில் அமைந்த மாற்றத்துக்கும் தயாராக இருக்க வேண்டுமா? இவ் விஷயங்கள் பற்றி இடதுசாரி ஐக்கிய முன்னணிக்குள் ஒப்பந்தம் கிடையாது. இந்த ரீதியிலும் ஒப்பந்தம் பூரணமற்றது.

உண்மையில் தற்பொழுதைய இடதுசாரி ஐக்கிய முன்னணி ஒரு தேர்தல் முன்னணி. இந்த முன்னணியை, ஏகாதிபத்திய எதிர்ப்பு, நிலப்பிரபுத்துவ எதிர்ப்புக் கடமைகளைச் சாதிப்பதற்கும், அதன் பின்னர் கூடிய விரைவில் நாட்டை சோஷலிசத்தை நோக்கி முன்கொண்டு செல்வதற்கும், மற்றும் பிற்போக்குச் சக்திகளுக்குத் தலைமை கொடுக்கக் கூடிய விதத்தில் தொழிலாள வர்க்கத்திற்குத் தலைமை தாங்கும் உறுதியான ஸ்தாபனமாக மாற்றுதல் எமது நோக்கமாக அமைதல் வேண்டும். இடதுசாரி ஐக்கிய முன்னணி அதற்கு முன்னுலுள்ள கடமைகளைச் சாதிப்பதற்கு முழுக்க மூழுக்க பாராளுமன்ற முறையை நம்பி இராது புரட்சிகர உபாயங்களையும் பின்பற்றச் செய்வது எமது நோக்கமாக அமைதல் வேண்டும். சோஷலிசத்திற்கான மாற்றத்திற்கு சமாதான முறை, சமாதான மற்ற முறை ஆகிய இரு சாத்தியப்பாடுகளுக்கும் தொழிலாள வர்க்கம் தயாராக இருக்கவேண்டும் என்பது மார்க்சிஸ – லெனினிஸத்தின் அடிப்படைத் தேவையாகும். இரு மாஸ்கோ அறிக்கைகளிலும் வெளியிடப்பட்டுள்ள சர்வதேசிய கம்யூனிஸ இயக்கம் ஏற்றுக்கொண்ட முடிவாகும். சமாதானமற்ற முறையில் அமைந்த மாறுதலின் சாத்தியப்பாட்டை மறுக்கும் அல்லது செயலளவில் குறைவு படுத்தும் அதே நேரத்தில் சமாதான முறைக்கு ஓரபட்சமான முக்கியத்துவம் கொடுத்தல் பாட்டாளி வர்க்கத்தை நிராயுதபாணியாக்குவதற்குச் சமமானதாகும்.

உழைக்கும் மக்களின் விடுதலைக்குப் போரிடுகையில் வரையறைக்குட்பட்ட சந்தர்ப்பங்களைப் பாவிக்கும் அதே நேரத்தில், எதிர்ப்புரட்சிப் பலாத்காரத்தைப் புரட்சிப் பலாத்காரத்தால் நசுக்குவதற்குப் புரட்சிகர சக்திகளை ஒன்றுசேர்த்துத் திரட்டுவது மார்க்சிஸ - லெனினிஸ்டுகள் மறக்க முடியாத கடமையாகும்.

பாராளுமன்றத்தில் பெரும்பான்மை பெறுவதற்குக்கூட, மக்களின் நம்பிக்கையையும், விசுவாசத்தையும் பெறுவதற்குத் தேவையான புரட்சிகர உபாயங்களைப் பின்பற்றுதல் இடதுசாரி இயக்கத்துக்கு அவசியமானதாகும். மக்களின் வெகுஜன போராட்டங்களை ஒழுங்கு படுத்தித் தலைமை தாங்குவதன் மூலமே இதனைச் செய்ய முடியும்.

சோஷலிசத்தை வெற்றிகரமாகக் கட்டி எழுப்புவதற்கு உறுதிமிக்க ஒரே வழியாக, ஏம்தா ஒரு உருவத்தில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் ஸ்தாபிக்கப்படல் வேண்டும் என்பது மார்க்சிஸ-லெனினிஸ அடிப்படைக் கொள்கையாகும்' சர்வதேசிய கம்யூனிஸ இயக்கம் ஏற்றுக் காண்ட முடிபுமாகும். தொழிலாளி வர்க்கத்தின் வெற்றி சமாதான முறையிலோ அன்றி சமாதானமற்ற முறையிலோ அமைந்தாலும், பிற்போக்கின் எதிர்ப்பை நசுக்கும் பிரச்சினையும், புரட்சியின் வெற்றிகளைப் பாதுகாப்பதும், சோஷலிஸக் கடமைகளை அமுல் படுத்துவதும் முக்கியமானவையாம். வெற்றிகரப் பாட்டாளி வர்க்கம், பழைய அரசாங்க இயந்திரத்தை உடைத்தெறிந்து, தனது புதிய அரசாங்க இயந்திரத்தை, பாட்டாளி வர்கக சர்வாதிகாரத்தை ஏற்படுத்துவதன் மூலமே இதனை உத்தரவாதப் படுத்த முடியும்.

ஆகவே, நவீன திரிபுவாதத்தின் நாசகாரத் தன்மையை எதிர்த்தும், சரியான மார்க்சிஸ-லெனினிஸக் கொள்கைகளுக்காகவும், இடதுசாரி ஐக்கிய முன்னணியை உண்மையான புரட்சிகர முன்னணியாக்குவதற்கும், புரட்சிகர சக்திகளுக்குத் தலைமை தாங்கக் கூடிய பலம் வாய்ந்த உண்மை ஆயுதமாக்குவதற்கும் நாம் இடதுசாரி ஐக்கிய முன்னணிக்குள் போரிடுதல் வேண்டும். கட்சியின் 6-வது மாநாடு முன்வைத்தபடி மார்க்சிஸ - லெனினிஸத்தின் அடிப்படையில் அமைந்த தனியொரு சோஷலிஸ்ட் கட்சியை உருவாக்குதல் எமது முடிவான நோக்கமாகும்.

பிற்போக்கு சக்திகள் ஒன்று திரண்டு பலமுறும் வேளையில், ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி ஒற்றுமையற்றும், ஏகாதிபத்திய எதிர்ப்புப் புரட்சிக்குத் தலைமை தாங்க முடியாதும், மறுத்தும் வருவதனால், நாட்டை முன் கொண்டு செல்ல முடியாது இருக்கையில், இடதுசாரி இயக்கத்திலிருந்து புரட்சிகரத் தலைமை முன்வராத நிலைமையில், தொழிலாள வர்க்கம் தற்பொழுதைய பாராளுமன்ற முறைக்குள் தனக்குச் சாதகமான முடிவை எதிர்பார்க்க முடியாது. ஏகாதிபத்திய பிற்போக்கை எதிர்த்தும், முதலாளி வர்க்கத்தை எதிர்த்தும் பாராளுமன்றத்திற்கு வெளியான முறைகளில் ஈடுபட்டுத் தங்கள் நலன்களைப் பாதுகாக்க அவர்கள் தயாராயிருத்தல் வேண்டும்.

தேசிய ரீதியிலும், சர்வதேசிய ரீதியிலும முற்போக்குச் சக்திகள் வளர்ந்துள்ளது, இத்தகைய போராட்டங்களை நடத்துவதற்கும் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையில் இந்த நாட்டு முற்போக்கு இயக்கத்தை மேலும் வளர்ப்பதற்கும் சாதகமான சூழ்நிலையை உருவாக்கியுள்ளது.

இன்று ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின்பால் மக்கள் வெறுப்புக் கொண்டுள்ளனர். ஏகாதிபத்திய எதிர்ப்புப் பாதையில் அது முன்னேற முடியாதது கண்டு வெறுப்புக் கொண்டுள்ளனர். அதே நேரத்தில், வெறுப்புக்குரிய யூ. என். பி. அதிகாரத்திற்கு வருவதை அவர்கள் எதிர்க்கின்றனர். ஆகவே மாற்றுத் தலைமை. தொழிலாள வர்க்கத்தின் தலைமை அளிப்பதற்கு, தற்பொழுதைய நெருக்கடியிலிருந்து புரட்சிகரப் பாதையைக் காட்டுவதற்குச் சரியான நேரம் வந்துள்ளது. ஆனால் துரதிருஷ்டவசமாக இத்தகைய தலைமையை எதிர்பார்க்கக் கூடிய இடதுசாரி இயக்கம் திரிபுவாதக் கொள்கைகளையும், வேலை முறைகளையும் பின்பற்றியதால், மக்களுக்குப் புரட்சிகரத் தலைமை அளிக்காது, வழிகாட்டாது கைவிட்டுள்ளது.

ஆகவே, எங்கள் கட்சியின் 7வது மாநாட்டின் கடமை, முழு இடதுசாரி இயக்கத்துக்கும், இதன் மூலம் முழு ஏகாதிபத்திய எதிர்ப்பு, நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு, முற்போக்கு சக்திகளுக்கும் புரட்சிகரத் தலைமை தாங்கும் சரியான பாத்திரத்தைக் கம்யூனிஸ்ட் கட்சி வகிக்கக்கூடிய விதத்தில் கம்யூனிஸ்ட் கட்சியில் புதியதோர் தலைமையை எழச் செய்வதாகும்.

# பி.சி.சி.யில் நடந்ததென்ன?

# பொய்யர்களுக்கு பி. சி. சி.

# சங்கத் தலைவர் பதில்



ஜே. பி. கோஸ்டா
[பி.சி.சி. தொழிற் சங்கக் கிளைத் தலைவர்]

திரிபுவாதப் பொய்யர்களின் கடந்த வார 'மௌபிம', 'தேசாபிமானி' பத்திரிகைகளில், சுகத்ததாஸ என்ற அநாமதேயப் பேர் வழியின் பேட்டியாக பி. சி. சி. பற்றிய ஒரு செய்தி பிரசுரிக்கப்பட்டிருந்தது. இதற்கு உத்தியோகபூர்வமாக பதிலிறுத்து இக்கட்டுரையை வெளியிடுகிறோம்.

**பி.ஸி.ஸி.** மில்லில், புண்ணுக்கு டாங்கியில் தவறி விழுந்து இறந்த தொழிலாளியைப் பற்றி, 30-ந் தேதி வெளியான 'மௌபிம'வும், 'தேசாபிமானி'யும்போக்கிரித்தனமாகவும், படுகீழ்த்தரமாகவும் செய்திகள் வெளியிட்டுள்ளன. இச்செய்திகள் முழுக்க முழுக்க பொய்யானவை மட்டுமின்றி, மோசமான புளுகுகளுமாகும்.

இத்தகைய கீழ்த்தர பொய்கள் கூறி, பி. சி. சி.தொழிலாளர்களை ஏமாற்றிவிடமுடியாது என்பதை, பி. சி. சி. தொழிற்சங்கத் தலைவர் என்ற ரீதியில் இப்பொய்யர்களுக்குக் கூறி வைக்கிறேன். இப்புளுகுணிக் கூட்டத்தார்கள் இத்தகைய பொய்களைத் தொடர்ந்து கூற முனைவார்கள் என்பதை எண்ணியே இந்த அறிக்கையை நான் இங்கு வெளியிடுகிறேன்.

'மௌபிமை'க்கும், 'தேசாபிமானி'க்கும் தேவையாக இருந்தது ஒன்றுதான். அகால மரணமடைந்த தோழர் எம். எம். குணபாலாவின் மரணத்திற்காக முதலைக் கண்ணீர் வடித்து, 600-க்கு மேற்பட்ட பி. சி. சி. தொழிலாளர்களை தோழர் சண்முகதாசனுக்கு விரோதமாக மூட்டிவிடுவது தான். நிர்வாகத்தின் பாதுகாப்பற்ற நிலைபற்றியோ, தொழிலாளர் கஷ்டங்கள் பற்றியோ இவர்களின் செய்தியில் குறிப்பே இல்லை. இவர்களின் ஒரே நோக்கம். தோழர் சண்முகதாசனை இழிவுபடுத்துவதேயாகும்.

தோழர் சண்முகதாசனை தொழிலாளர்களிட மிருந்து வேறுபடுத்த இந்தகருங்காலிப் பத்திரிகைகள் எடுக்கும் முயற்சிகள் படுதோல்வியுறும் என்பதை கூறிவைக்கிறேன்.

தோழர் சண், தொழிலாளர்களாகிய எங்களுடன் ஐக்கியமுற்றுள்ளார். அவர் எங்களுக்கும், நாங்கள் அவருக்குமாக இணைந்து, பிணைந்துள்ளோம்.

தோழர் குணபாலாவின் துரதிருஷ்ட மரணம் நேர்ந்த போது, தோழர் சண் எங்களுடனே இருந்தார். இந்த சம்பவத்தின்பின், மரணமடைந்த குணபாலாவின் குடும்பத்தாருக்குப் போதிய நஷ்டஈடு பெற்றுத்தர தோழர் சண் தொழில் இலாக்கா மூலம் நடவடிக்கை எடுத்தார். அதோடு, பத்திரிகை நிருபர்களை வேலை ஸ்தலத்திற்கு அனுப்பிவைக்கும் தன் கடமையையும் செய்தார். தொழிலாளர்களுக்கு பி.சி.சி.யில் போதிய பாதுகாப்பு இல்லை என்பதைப் படம்பிடித்துக் காட்டுவதற்காகவே தோழர் சண் படப்பிடிப்பாளர்களைஅனுப்பி வைத்தார்.

இயந்திரத்தில் சிக்குண்ட பிணத்தை உடனடியாகவெளியே எடுக்க, பி.சி.சி. அதிகாரிகளுடன் வாதிட்டது யார்? சண்முகதாசனே இப்பொறுப்பான கடமையைச் செய்தார்; இல்லை என்று மறுக்க முடியுமா? துணிவிருந்தால் அண்டப் புளுகு அவிழ்த்துவிடும் 'மௌபிமா'வும், 'தேசாபிமானி'யும் மறுத்துக் கூறட்டும்.

அபாயகரமான ஒருநிலை ஏற்பட்டவுடன் உறுதிகொண்ட மனோதைரியத்துடன் தோழர் சண் கடமையாற்றினரே தவிர, 'மௌபிமை'க்கு பொய் அறிக்கை கொடுப்பதற்காப் பயித்தியம் பிடித்து அலையவில்லை.

'சண்முகதாசன் இரத்தம் பார்க்கமுடியாதவர்' என்பது, மௌபிமையினதும், புளுகுணி சுகத்ததாஸாவினதும் கைச்சரக்கு என்பதை ஒவ்வொரு பி. சி. சி. தொழிலாளர்களும் அறிவர்.

பொய்யும் புளுகுமாக, பி. சி. சி. தொழிலாளர்களுக்கு அவமானம் தேடித்தரும் செய்திகளை மௌபிமைக்குக் கொடுக்க ஒருவர் முனைந்துள்ளார். இவர் யார்?

இவர் வேறு யாருமல்ல; மறைந்த தோழர் குணபாலாவின் ஈமச்சடங்குகளுக்காக கனத்தை மயானம் செல்லும் வழியில், மூச்சுமுட்டக் குடித்து, தொழிலாளர்கள் மத்தியில் மிகவும் மட்டரகமாக நடந்துகொண்ட நபரே இவர். இவரின் கேடுகெட்ட நடத்தைகள் தோழர் குணபாலாவின் சடலத்திற்கும், பி.சி.சி. தொழிலாளர்களுக்கும் கேவலத்தையும், அவமானத்தையும் தேடித் தந்தது.

இந்நபரின் தொழிலாள துரோக 'ரிக்கார்டு'கள் அதிகம் இருக்கின்றன. இவைகளில் சில அதோ!

1. பி. சி. சி. தொழிலாளர் சங்கத்தில் எவ்விதப் பொறுப்புமில்லாது, தொழிலாளர்களிடமிருந்து ஒதுக்கப்பட்டவர்.
2. முன்பு தலைவராக இருந்த போது, கம்யூனிஸ்ட் விரோதியாகவிருந்தார்.
3. வேலைத்தளஅதிகாரிகளிடம் லஞ்சம் வாங்கி, தொழிலாளர்களைக் காட்டிக்கொடுத்தார். இக்குற்றத்திற்காக உத்தியோகத்திலிருந்து நீக்கப்பட்டு, சங்கத்திலிருந்து விரட்டப்பட்டார்.
4. மோட்டார் லைசன்ஸ் வாங்கித் தருவதாகக்கூறி சில அங்கத்தவர்களிடமிருந்து பணம் வாங்கி மோசடி செய்து, திருட்டுப்பட்டம் பெற்றவர்.

இத்தகைய கேடுகெட்டத் தொழிலாளர்துரோக,உழைப்பாள மக்கள் அனைவருக்குமே இழுக்கையும், அவமானத்தையும் தேடித்தரும் நபர்தான் ''மௌபிமை'யின், ''தேசாபிமானி''யின் நிருபர்.

பொய்யும், படுகீழ்த்தரமான புளுகுகளையும் அவிழ்த்துவிடும், இத்தகைய கயவர்களிடமிருந்தும், அவர்களின் செய்திக்கும், கயிறு திரிக்கும் விஷயங்களுக்கும் முதலிடம் தரும் திரிபுவாதிகளின் பத்திரிகைகளிலிருந்தும் தொழிலாளர்கள் தம்மைப் பாதுகாத்துக்கொள்ளவேண்டும். இல்லாவிடில், எல்லாருக்குமே பேராபத்துத்தான்.

# இலங்கையில் மக்கள் கொரிய வர்த்தக மந்திரி

## இலங்கை அரசுடன் வர்த்தக பேச்சுவார்த்தைகள்

**கொ**ரிய ஜனநாயக மக்கள் குடியரசின், வெளிநாட்டு வர்த் கௌரவ லீ இல் கியுங், தக மந்திரிகடந்த சனிக்கிழமை தனதுகோஷ்டியுடன் இலங்கை வந்து சேர்ந்தார்.

கட்டுநாயக்கா விமான நிலையத்தில், நூற்றுக்கணக்கானோர் அவரை வரவேற்றனர்.

அரசாங்கத்தின் சார்பில் கௌரவ மைத்திரிபால சேனநாயக்கா, ஏ. பி. ஜயசூரியா ஆகியோர் மந்திரியை வரவேற்றனர்.

இலங்கை-மக்கள் கொரிய நட்புறவுக் கழகத்தின் சார்பில், அதன் தலைவர் ரட்ண தேசப்பிரிய சேனநாயக்கா, பொதுச் செயலாளர் எச். எம். பி. முஹிதீன் உட்பட, பல கமிட்டி அங்கத்தவர்கள் மலர்மாலை அணிவித்து தூதுகோஷ்டியினரை வரவேற்றனர்.

பொதுமக்கள் சார்பில், பாராளுமன்ற அங்கத்தவர் எஸ். டி. பண்டாரநாயக்கா, ஸ்ரீமதி தேஜா குணவர்தன உட்பட நூற்றுக்கணக்கானோர் மலர்மாலையுடன் மந்திரியையும், அவரது சகாக்களையும் வரவேற்றனர்.

விமான நிலையத்தில் நாட்டிய கோஷ்டியினர் 30 நிமிடங்களுக்கு மேல் கொரிய தூதுகோஷ்டியினருக்கு கலை விருந்தளித்துத் தமது வரவேற்பைத் தெரிவித்தனர்.

இத்தூதுகோஷ்டி இலங்கையில் ஒரு வார காலம்தங்கியது. இவ்வேளையில், இலங்கைக்கு துணி, சிமேந்து, கருவாடு, யந்திரங்கள் ஆகியவை விற்பது சம்பந்தமாக வர்த்தக மந்திரியுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தியது.

இலங்கையிலிருந்து பெருந்தொகை தேங்காய் எண்ணெய் ரப்பர் வாங்க கொரிய தூதுகோஷ்டியினர் விருப்பம் தெரிவித்துள்ளனர்.

இலங்கைக்கு அதிக லாபம் தரும் இலங்கை-கொரிய வர்த்தகம் வெற்றிபெற வாழ்த்துகிறோம்.



கொரிய வர்த்தக மந்திரியை கௌரவ மைத்திரிபால சேனநாயக்கா, ஏ. பி. ஜயசூரிய, எஸ். டி. பண்டாரநாயக்க ஆகியோர் வரவேற்று அழைத்துவருகின்றனர்.

# வளர்ச்சி நிதி

**க**டந்த இரு வாரங்களில் வெளியான தொழிலாளி-கம் கருவா வளர்ச்சி நிதிப்பட்டியலில் கீழ்க்கண்ட தோழர்களின் நன்கொடைப்பணம் தவறுக குறிக்கப்பட்டுள்ளது. அவற்றை கீழ்கண்டவாறு திருத்திக் கொள்ளவும். தவறு நேர்ந்தமைக்கு வருந்துகிறோம்.

சி. மல்லவராய்ச்சி ரூ. 2-00, ஏ. சுசிமா டி சில்வா 5-00, எச். ஆர். ஹின் மாத்தயா 5-00, எச். ஜீ. ஹெந்திரிக் 5-00, டபிள்யு. ஏ. டி. அப்புஹாமி, 2-00, கே. ஈ. டி. சில்வா 5-00, எச். எல். பேதிரிக் 2-00, கே. ஈடின் சில்வா 5-00, லூயிஸ் பெரேரா 2-00.

| | |
|---|---|
| முன்வரவு மொத்தம் ரூ. | 386 00 |
| கே.ஏ.எஸ். குணசேகர | 4 00 |
| டி.எச்.எல்.சேனநாயக்க | 2 00 |
| டீ. குணவர்தன | 2 00 |
| தர்மதாச ஜயக்கொடி | 1 00 |
| எம்.டபிள்யு. ரணசிங்க | 1 00 |
| சி. கந்தையா | 3 00 |
| டி. டயனிஸ் சில்வா | 1 00 |
| எம்.எம்.எஸ். சலால்தீன் | 1 00 |
| ஜயசோம வியஜதிலக்க | 2 00 |
| என். சண்முகம் | 3 00 |
| டி.கே. ரத்னயக்க | 1 00 |
| கிளேரா குணவர்தன | 1 00 |
| எச்.வி. ஆரியதாச | 2 00 |
| நாகோஷ் | 3 00 |
| ஆர்.வி. துரைரத்தினம் | 1 00 |
| பிரேமலால் தமாரசிரி | 10 00 |
| கே.ஏ. விமலபால | 5 00 |
| டபிள்யு. எஸ். ஏ. டி. சிரிவர்தன | 2 00 |
| டி.ஏ. குணவர்தன | 2 00 |
| டி.ஏ. குணசேகர | 2 00 |
| கே.பி.ஜீ. பியதாஸ | 1 00 |
| காமினி | 4 00 |
| டி.பி. விமலகுண | 1 00 |
| கே. டபிள்யு. சுவாரிஸ் | 1 00 |
| பி.எச்.ஆர்.எம். உக்குபண்டா | 1 00 |
| சுசிலா கருணரத்ன | 1 00 |
| ஆர். பொன்னையன் | 25 00 |
| ரணசிங்க | 1 00 |
| ஆர்.எம்.டி.ரொட்ரிகோ | 1 00 |
| ஆர்.டி. பியசேன | 1 00 |
| ரி. எச். ரொபட் | 1 00 |
| டபிள்யு. டியுடர் டிமெல் | 1 00 |
| கே.பி.எல். சிரிபால | 1 00 |
| எம்.எம்.பி. தர்மதாச | 1 00 |
| கே. பவுலிஸ் | 1 00 |
| எஸ்.டி.சரத்விக்ரமசிங்க | 1 00 |
| எம்.ஜே.எஸ். பெரேரா | 1 00 |
| ஜினதாச அத்துபத்து | 5 00 |
| ஏ.கே. கரோலிஸ் | 1 00 |
| சந்திரகுப்த வீரசூரிய | 4 00 |
| நீல் தர்மரத்ன | 3 00 |
| எம்.பீ.ஜே. பெர்ணந்து | 4 00 |
| டி. விக்ரமசிங்க | 4 00 |
| ஏ.பி. லீலாரத்ன | 4 00 |
| எம்.எம். அலடின் | 4 00 |
| ஏ.பி. ஜயன்ஹாமி | 4 00 |
| டபிள்யு.டி.செனவிரத்ன | 4 00 |
| விஸ்வமித்திர | 4 00 |
| மொத்தம் | 518 00 |

# கசாப்புக்கடை 'ஜீவகாருண்யகர்த்தாக்கள்'

**காலமும் கருத்தும்**

அணுப் பரீட்சைத் தடை ஒப்பந்தம், உலக சமாதானத்திற்குக் கிடைக்கப் பெற்ற மகத்தான வரப் பிரசாதம் என்று சோவியத் நாட்டு திரிபுவாதிகளும், இலங்கையிலுள்ள 'கும்பகர்ண'ர்களும் சில வாரங்களுக்கு முன் கூப்பாடு போட்டனர்.

ஆனால், நாள் செல்லச் செல்ல இவர்களின் காட்டுக் கூச்கல் குறைந்து வருகிறது.

காரணம் என்ன?

சமாதானத்தின் ஏந்தல்கள், சாந்தி அண்ணல்கள் என்று இவர்கள் வர்ணித்த அமெரிக்க ஏகாதிபத்தியக் கும்பலின் தலைமை உருவங்கள், அரைகுறை அணுப் பரீட்சை ஒப்பந்தத்தை-தாம் கையெழுத்திட்ட ஒப்பந்தத்தைக் குழிதோண்டிப் புதைத்துவிட்டு, தமது அடிமைத். தளையை விரிவுபடுத்தவும், தமது சுரண்டலை விஸ்தரிக்கவும் முழு மூச்சில் ஈடுபடுகிறார்கள்,

கியுபா நாட்டு செய்தியின் படி, மாஸ்கோவில் இவ் ஒப்பந்த விழா நடைபெற்றுக் கொண்டிருந்த அதே வேளையில் அதே விநாடியில் கியுபாவின் மீது அமெரிக்கா தாக்குதல்கள் நடாத்தியுள்ளது. ஒப்பந்த நாள் முதல் இன்றுவரை நூற்றுக்கு அதிகமான அப்பாவி கியுபா மக்கள் அமெரிக்க ஏகாதிபத்திய வெறியரின் யுத்த வெறிக் கும்பல்களுக்குப் பலியாகியுள்ளனர். மாஸ்கோ ஒப்பந்த தினத்திலிருந்து இன்றுவரை 9-க்கு மேற்பட்ட தாக்குதல்கள் நடைபெற்றுள்ளதாக ஹவானா செய்தியொன்று கூறுகிறது.

மாஸ்கோ ஒப்பந்தத்திற்குப் பின் ''சகஜீவன'' நண்பர்களான, ''சமாதான'' நேசர்களான மறைந்த கெனடியின் நிர்வாகம் ஜெர்மனி ஆடோபான் (விரிவான பாதை) விவகாரத்தை உருவாக்கி, ஒரு உலக யுத்தத்தையே தோற்றுவிக்க, முனைந்தது,

சென்ற மாதம், 15 ஆயிரம் அமெரிக்க துருப்புகளை, அணுக் கருவிகளுடன், 3 தினங்களில் மேற்கு ஜெர்மனிக்கு அனுப்பி 'அமெரிக்க சகஜீவன நேசர்கள்'' யுத்தப் பரீட்சை நடத்தினார்கள். இத் துருப்புகள் இப்பொழுது ஐரோப்பாவெங்கும் யுத்தப் பரீட்சை நடத்துகின்றன. நாட்டோ பகிரங்கமாகவே வேலை செய்ய ஆரம்பித்துள்ளது. அமெரிக்க ஏகபோக யுத்த வெறிக் கூட்டம் 'சமாதான ஒத்திகை நடத்துகிறது' என்று திரிபுவாதிகள் கூறாதிருந்தால் அதுவே போதுமானது.

சென்ற மாதம் மற்றொரு பயங்கர நிகழ்ச்சியும் நடந்துள்ளது. இந் நிகழ்ச்சியை சோவியத் செய்திப் பத்திரிகை ''டாஸ்'' விமர்சனம் செய்யும் அளவுக்கு நிலைமை முத்தியுள்ளது. ஆம்! ''அமெரிக்க சகஜீவன வீரர்கள்'' மேற்கு ஜெர்மனியில் ராக்கட் தளம் அமைக்க ''அமெரிக்க அஸ்திவாரம்'' போட்டுள்ளனர்.

''அமெரிக்காவின் சமாதான ஏற்பாடு இது!''

அரைகுறை அணுப் பரீட்சைத் தடைக்குப் பின், இன்றுவரை அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள், 8 குண்டுகளை பூமிக்கடியில் பரிசீலித்துள்ளதாக, அமெரிக்க ''டைம்ஸ்'' பத்திரிகை கூறுகிறது.

லத்தீன் அமெரிக்க நாடுகளில் கியுபா நாட்டு வீரத் தளபதி பிடல் காஸ்ட்ரோவின் விபரப்படி, ஒரு விநாடிக்கு நாலு லத்தீன் அமெரிக்க பிரஜைகளை ''சமாதான லட்சிய வீரர்களா''ன திரிபுவாதிகள் வர்ணிக்கும் யுத்த வெறிக் கூட்டம் சாகடித்து வருகிறது. ஒவ்வொரு பிணத்திலிருந்தும் அமெரிக்க யுத்தப் பைசர்சக் கூட்டம் 1,000 டாலர்கள் சம்பாதிக்கிறது.

அமெரிக்க யுத்தவெறிக் கும்பலின், யுத்தக் கொதிபிடித்த நடவடிக்கைகள் திரிபுவாதிகளின் கண்களைத் திறக்குமா?

★

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியிலுள்ள திரிபுவாதிகள், தமது அவசர, சட்டவிரோத அறிக்கையான ''சர்வதேச கம்யூனிஸ்ட் இயக்கத்தின் பிரச்சினைகளில்'' மாஸ்கோவில் கைசாத்டப்பட்ட அரைகுறை அணுப் பரீட்சைத் தடை ஒப்பந்தத்திற்கு, இலங்கை மக்கள் சகலரும் ஆதரவு தெரிவிப்பதாகப் பீத்தியுள்ளனர்.

இவர்களின் இந்தக் கூற்றில் எவ்வளவு தூரம் உண்மை இருக்கிறது?

இதோ ஒரு உதாரணம்;

இலங்கை சமாதான கவுன்சிலும், இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியிலுள்ள திரிபுவாத மத்தியக் கமிட்டியும் கூட்டாகச் சேர்ந்து, மாஸ்கோ ஒப்பந்தத்திற்கு ஆதரவு தெரிவிக்கும் கூட்டமொன்றை, டரட் ரோட்டிலுள்ள செஞ்சிலுவை சங்கமண்டபத்தில் நடத்தினர்.

ஒரு வார காலம் திரிபுவாதத் தலைவர் பெருமான்களும், சமாதான கவுன்சில் வீரர்களும் (இவர்களுக்கும் சமாதானத்திற்கும் வெகு தூரம்) இக் கூட்டத்தை வெற்றிகரமாக நடத்த இரவு பகல் வேலை செய்தனர். போஸ்டர்கள், நோட்டீசுகள், பத்திரிகை விளம்பரங்கள், ரேடியோ செய்திகள் - அவர்கள் செய்யாத பிரச்சாரங்கள் இல்லை.

முடிவில் கூட்டம் நடந்தது. மேடையில் 7 பேச்சாளர்கள் அதைக் கேட்க மொத்தம் 36 பேர் (இவர்களைத்தான் ''இலங்கையிலுள்ள சகல மக்களும்'' என்று இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியிலுள்ள திரிபுவாதிகள் வர்ணித்துள்ளனர்.) 36-ல், ஒப்பந்தத்திற்கு விரோதமான அபிப்பிராயம் கொண்டவர்கள், ஆனால், கூட்டத்தைக் கேட்கச் சென்றவர்கள் நால்வர்.

கூட்டம் நடக்கும்வேளையில், கூட்டத்திலிருந்து ஒவ்வொருவராய் வெளியேறி, கூட்ட முடிவில் இருந்தவர்கள் தொகை, மேடையில் 6; மண்டபத்தில் 20-க்கும் குறைவு.

இந்தக் கூட்டத்தில், முன்னேற்பாட்டின் படி சினிமா காட்டுவது எங்ஙனம்? எனவே, 'புத்திசாலிகளான' ''கூட்ட அமைப்பாளர்கள்'' சினிமாவை ரத்துச் செய்தனர்.

இந்த ரீதியில்தான் ''இலங்கை மக்கள் சகலரும்'' மாஸ்கோ ஒப்பந்தத்திற்கு ஆதரவு தெரிவித்தனர்.

—ஊர்சுற்றி.

### அச்சுத் தொழிலாளர் சங்கத்தை உடைக்கச் சதி

# ஓநாய் பல்லைக்காட்டினால் சிரித்ததாகுமா?

இலங்கை அச்சுத் தோழிலாளர் சங்கத்தின் பேரால் கடந்த 5-ந் தேதி ஒருசில துரோகிகள் நடத்திய வருடாந்த மாநாட்டை, அச்சுத் தொழிலாளர்களும், சங்க உறுப்பினர்களும் பகிஷ்கரித்து வெளியேறியபின், சதிகார அர்னோலிஸ் அப்புஹாமி தனது கையாட்கள் ஐவரை வைத்துக் கொண்டு வெட்கமானமின்றி ஒரு கமிட்டியை அமைத்து, தன்னைச் செயலாளராக்கி, பத்திரிகையில் அறிக்கை விடுத்துள்ளார்.

ஐவர் மாநாட்டில் புதிதாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ள கமிட்டியிலுள்ள பொருளாளர் அச்சுத் தொழிலாளர் சங்கத்தில் என்றுமே உறுப்பினராக இல்லாதவரும், ''லங்கா பிரஸ்'' தொழிலாளர்கள் இலங்கை அச்சுத் தொழிலாளர் சங்கத்தில் இணைந்தபோது அவர்களுக்கு எதிராகச் சதி செய்து கருங்காலித்தனம் பண்ணியவருமான சோமரத்ன ஆவர்.

## ஜனவரி 4-ந் தேதி அச்சுத் தொழிலாளர் மாநாடு

இப்படிப்பட்ட கருங்காலிகளை, அச்சுத் தொழிலாளர் சங்கங்கத்தில் சேரவந்த தொழிலாளர்களை மறித்தவரை, சங்க உறுப்பினரல்லாதவரை வைத்து அமைத்துள்ள கமிட்டியைத்தான் பீட்டர் கெனமனும் புகழ்ந்துள்ளார். விடிந்தால் நடுநிசிவரை தொழிலாளர் ஸ்தாபனங்களைச் சீர்குலைப்பதும், இலங்கைத் தொழிற் சங்க சம்மேளனத்தை பிளவுபடுத்த போட்டித் தொழிற் சங்கம் அமைக்க சதித்திட்டம் தீட்டும் திரிபுவாத பீட்டர் கெனமன், இந்தச் சீர்குலைவு வேலைகளுக்கு புகழ்பாடுவது புதுமையானதல்ல!

இலங்கை தொழிற் சங்க சம்மேளனத்தின் கீழ் இணைந்துள்ள, இலங்கை அச்சுத் தொழிலாளர் சங்கத்திற்கு போட்டியாக, அதே பெயரில் போலி காரியாலயம் ஒன்று அமைக்க சதிகார அர்னோலிஸ் அப்புஹாமி முயலுவதாகத் தெரிகிறது.

''ஓநாய் பல்லைக் காட்டினால், சிரித்ததாகாது'' என்பதை பீட்டர் கெனமனுக்கும்-சதிகார அர்னோலிஸுக்கும் சொல்லிவைக்கின்றோம்.

மார்க்ஸிஸ—வெனினிசத்தைக் கைவிட்டவர்கள், தொழிலாளர் வர்க்கத் துரோகிகளாக மாறுவர் என்பதற்கு அத்தாட்சியாக இவர்கள் இன்று காட்சி தருகிறார்கள்.

சட்டவிரோத - பிளவு-போலித்தனமான 5-ந் தேதி கூட்டத்தைக் கண்டித்து வெளியேறிய தொழிலாளர்களை காடையர்களை ஏவி போத்தல்களால் தாக்கி படுகாயப்படுத்தியதை தொழிலாளர்கள் மறந்துவிட மாட்டார்கள்.

என்வெலப் பெக்டரி தொழிலாளர் தோழர் மார்ட்டின் காலில் படு காயமடைந்துள்ளதோடு மற்றும் இரு தொழிலாளர்களும் காயம் அடைந்துள்ளார்கள். இந்த விஷமத்தனத்தை எதிர்த்து அச்சுத் தொழிலாளர்கள் கோபாவேசமடைந்துள்ளார்கள். பெக்டரி வாசல்களுக்கு இந்தத் துரோகிகள் வரட்டும் என்று சூளுரைத்துள்ளார்கள்.

இந்தத் துரோகிகளை உதறித் தள்ளி இலங்கை அச்சுத் தொழிலாளர் சங்கம் 1964 ஜனவரி 4-ந் தேதி தனது வருடாந்த மாநாட்டைக் கூட்ட நடவடிக்கை எடுத்து வருகிறது.

### சி. டி. யூ. எப். மாநாடு

# பிரதிநிதிகள் தெரிவு முறை

திரிபுவாதக் குரலான 'மௌபிம,' இலங்கை தொழிற் சங்க சம்மேளனத்தை இழிவுபடுத்தும் நோக்குடன், மாநாட்டிற்குப் பிரதிநிதிகள் தெரிவு செய்யும் முறையில் தவறு கண்டுபிடிக்க முயல்கிறது. சில தொழிற்சாலைகளில், 100 அங்கத்தவர்களுக்கு ஒரு பிரதிநிதிமூலம் சரியான முறையில் பூரணமான பிரதிநிதித்துவம் வழங்கப்படவில்லை என்று குறை கூறுகின்றனர்.

இலங்கை தொழிற் சங்க சம்மேளனத்தின் 16 — வது மாநாட்டிற்கு பிரதிநிதிகள் எப்படித் தேர்ந்தெடுக்கப் படுகிறார்கள் என்பதை சற்று கவனிப்போம். பிரதிநிதிகள், தொழிற்சாலையைப்பிரதிநிதித்துவப் படுத்துவதில்லை. மாறாக, சம்மேளனத்தில் அங்கம் வகிக்கும் சங்கங்களைத்தான் பிரதிநிதித்துவப் படுத்துகின்றனர். ஒவ்வொரு சங்கமும், 100 அங்கத்தவருக்கு ஒரு பிரதிநிதி மூலம் தேர்ந்தெடுக்க முடியும். எந்த ஒரு சங்கமும் ஆகக் கூடியதாக 50 பிரதிநிதிகளுக்கு மேல் அனுப்பமுடியாது. இந்த வரையறுப்பின் மூலம், லட்சக் கணக்கான அங்கத்தவர்களைச் சேர்க்கக் கூடிய தோட்டத் தொழிலாளர் சங்கம் போன்ற சங்கங்கள், ஏகப் பிரதிநிதித்துவம் பெறுவதைத் தடுக்க முடிகிறது.

பிரதிநிதிகளை எப்படித் தேர்ந்தெடுப்பதென்பது அந்தந்த சங்கத்தின் தீர்மானப் படியே அமையும். இப் பிரதிநிதிகள், சங்கத்தின் விசேஷ பொதுக் கூட்டத்திலோ, அல்லது அதன் பொதுச் சபையிலோ தேர்ந்தெடுக்கப்பட முடியும். அதிகப்படியான சங்கங்கள், தமது சங்கத்தின் மிகச் சிறிய கிளையைக் கூட பிரதிநிதித்துவப் படுத்துகின்றன, பொதுவாக, பொதுச் சபை, அல்லது நிர்வாகசபை, ஒவ்வொரு தொழிற்சாலைக்கும் எத்தனை பிரதிநிதிகள் என்று வரையறுப்பதுண்டு. தொழிற்சாலைகளில் இப் பிரதிநிதிகள் தொழிலாளர்களின் பொதுக் கூட்டத்திலோ, தொழிற்சாலைக் கமிட்டிகளிலோ நமது பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பர். இதைத் தீர்மானிக்கும் பொறுப்பு தொழிற்சாலை அங்கத்தவர்களுக்கே உரியது. எந்த முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டாலும் மாநாட்டில் கலந்து கொள்ளும் பிரதிநிதிகள், தமது சங்கத்தின் பிரதிநிதிகளாகக் கலந்து கொள்வாரே அன்றி, தொழிற்சாலையின் பிரதிநிதியாக அல்ல.

1600 அங்கத்தவர்களைக் கொண்ட வெள்ளவத்தை ஆலைத் தொழிலாளர்கட்கு மூன்று பிரதிநிதிள் மட்டும்தான் நியமிக்கப்பட்டனர் என்று குற்றம் சாட்டப் படுகிறது. இதற்குக் காரணம், வெள்ளவத்தை ஆலைத் தொழிலாளர்கள் அங்கத்துவம் வகிக்கும் ஐக்கிய எஞ்சினியரிங் தொழிலாளர் சங்கம், தனது 27 கிளைச் சங்கங்களுக்கும் ஒவ்வொரு பிரதிநிதி விகிதமும், மிகுதியை பெரிய கிளைகளுள்பகிந்ர்து கொள்ள வேண்டியதே. இலங்கைத் தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் தலவாக்கொல்லைக் கிளையில் 15,000 அங்கத்தவர்கள் இருந்தும் 9 பிரதிநிதிகளைத்தான் பகிர்ந்து கொண்டனர் என்பதையும் ஞாபகப் படுத்த வேண்டும்.

இலங்கைத்தொழிற்சங்கசம்மேளனத்தின் மாநாட்டிற்கு பிரதிநிதிகள், சம்மேளனத்தின் சட்டதிட்டங்களுக்குக் கிணங்க எப்பொழுதும் ஜனநாயகமாகத்தான், தேர்ந்தெடுக்கப் படுகின்றனர்.

தமது கட்சியின் சட்ட திட்டங்களை மதித்து இருவருடங்களுக்கொருமுறை கட்சி மாநாட்டைக் கூட்ட முடியாத திரிபுவாதிகள், இரு வருடங்களிற்கு ஒருமுறை மாநாடு கூட்ட எப்பொழுதுமே தவறாத இலங்கைத் தொழிற் சங்க சம்மேளனத்திற்கு ஜனநாயகத்தைப் பற்றியும், சட்டதிட்டக்களுக்கிணங்க செயலாற்றுவது பற்றியும், போதிக்க முயல்வது விந்தையிலும் விந்தையாகும்.

பதிப்பித்து வெளியிடுபவர்: ஹசன் மொஹிதீன் பக்கீர் மொஹிதீன், 123, யூனியன் பிளேஸ், கொழும்பு-2. அச்சிட்டது: ஆர். ஜே. ஆர். அச்சகம், 90/11, கியு வீதி, கொழும்பு-2.